பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 26 புதன்கிழமை (12.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 16

## ஈழம் என்ற அபிலாசை சட்டபூர்வமற்றதல்ல; புலிகளின் அணுகுமுறையே ஏற்க முடியாதது

### சர்வதேசம் மீதான பிரபாவின் குற்றச்சாட்டு அடிப்படையற்றதல்ல



டொமினிக் சில்கொட்.

கொழும்பு, டிச. 12

* ஈழம் என்ற அரசியல் அபிலாசை சட்டபூர்வமற்றது அல்ல. ஆனால், அதனை அடைவதற்கான விடுதலைப் புலிகளின் அணுகுமுறை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

* பிரபாகரன் சர்வதேசம் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களை அடிப்படை இல்லாதவை என்று கூறமுடியாது.

* ஆனால், வன்முறைகள் அற்ற வழியில் அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற சர்வதேசத்தின் விருப்பத்தைப் பிரபாகரன் புறக்கணித்துள்ளார்.

- இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் டொமினிக் சில்கொட்.

முன்னாள் பிரதமர்களில் ஒருவரான டட்லி சேனநாயக்காவின் நினைவாக ஆற்றிய பேருரையிலேயே தூதுவர் இவற்றைக் குறிப்பிட்டார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தூதுவர் டொமினிக் சில்கொட்

(10ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றத் திடீர் கலைப்புக்கான சாத்தியங்கள் அதிகரித்திருக்கின்றன

## நாளை மறுதினம் அதிர்ச்சிகள் அரங்கேறலாம்

யாழ்ப்பாணம், டிசெம்பர். 12

நாடாளுமன்றம் திடீரெனக் கலைக்கப்படுவதற்கான சாத்தியங்கள், அரசியலில் அதிகரித்து வருவதாக கொழும்பில் அவதானிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வரவு - செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாக்கெடுப்பு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறும்போது அது தோற்கடிக்கப்படுவதற்கான ஏதுநிலைகள் தோன்றிவிட்டதாக அரசியல் நோக்கர்கள் மதிப்பிடுகின்றனர்.

அத்தகைய நிலைமையைத் தவிர்ப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வியாழக்கிழமை இரவு நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அறிவிப்பை வெளியிடுவதற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மறைவிடம் யாலவில் கண்டுபிடிப்பு

கொழும்பு, டிச.12

யால சரணாலயப் பகுதியில் இருந்து படையினர் நேற்றுக்காலை ஒருதொகுதி மருந்துப் பொருள்களைத் தாம் மீட்டிருக்கின்றனர் என்று தெரிவித்திருக்கின்றனர்.

யாலப் பகுதியில் தேடுதல் நடத்தி வரும் படையினர் காட்டுப் பகுதியில் புலி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் தமிழர்கள் கவன ஈர்ப்புப்போராட்டம்

கொழும்பு, டிசெ.12

சர்வதேச மனித உரிமைகள் நாளான நேற்றுமுன்தினம் லண்டனிலுள்ள பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முன்பாக ஈழத் தமிழர்கள், இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்களைச் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில் கவனஈர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

லண்டனில் உள்ள பிரித்தானிய நாடாளுமன்றம் முன்பாக பிற்பகல் 2 மணியள

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆறு எம்.பிக்கள் வெளிநாட்டில்

### 'பட்ஜெட்' வாக்கெடுப்பின்போது பிரசன்னமாவரா?

கொழும்பு, டிசெ.12

வரவு - செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நாளை மறுதினம் நாடாளுமன்றில் நடக்கவிருக்கையில் -

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆறு எம்.பிக்கள் தற்சமயம் வெளிநாட்டில் இருக்கின்றார்கள்.

வாக்கெடுப்பில் பங்குபற்றுவதற்காக அவர்கள் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் நாடு திரும்பி விடுவார்களா என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

வாக்கெடுப்பின்போது வரவு - செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பது எனத் தமிழ்த்தேசிய கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது.

எதிர்த்து வாக்களிப்பதற்காக அன்றைய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசு யுத்தநிறுத்தம் எதையும் கடைப்பிடிக்காது

### ஜப்பானில் வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம தகவல்

கொழும்பு, டிச.12

விடுதலைப்புலிகளுடன் எதிர்காலத்தில் நடத்தப்படக்கூடிய எந்தப் பேச்சுகளின்போதும் அதற்கு முன்னேற்பாடாக யுத்த நிறுத்தம் ஏதும் கடைப்பிடிக்கப்படவே மாட்டாது.

- இவ்வாறு இலங்கை வெளிவிவகார

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் பகுதியில் முன்நகர்வு புலிகளால் நேற்று முறியடிப்பு

### இருதரப்புகளும் முரணான தகவல்

கொழும்பு, டிச.12

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாலைக்குழி, அடம்பன் ஆகிய இருமுனைகளில் அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று கடும் சமர் நடைபெற்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாலைக்குழி, அடம்பன் பகுதிகளில் நேற்று நண்பகல் சுமார் 12 மணியளவில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் இன்றும் நாளையும் சர்வமதத் தலைவர்களின் மாநாடு

### வெளிநாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வருகை

யாழ்ப்பாணம், டிச 12

சமாதானத்தை கட்டி எழுப்பும் நோக்குடன் சர்வமதத் தலைவர்களின் இரண்டு நாள் சர்வதேச மாநாடு இன்றுகாலை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றது.

யாழ். நூலக கேட்போர் மண்டபத்தில் இன்றுகாலை 8.30 மணிக்கு சர்வமதக் குருமாரின் மங்கள விளக்கேற்றலுடன் மாநாடு ஆரம்பமாகும்.

சமாதானத்தை எட்டுவதற்கான வழிமுறைகள் குறித்து சர்வமதத்தலைவர்கள் உரையாற்றுவர். அதன் பின்னர் குழுநிலையில் கருத்துப் பரிமாற்றம் இடம்பெறும்.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பெரியதம்பனையில் 3 படையினர் காயம்

கொழும்பு, டிச.12

வவுனியா, பெரியதம்பனைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் தாக்குதல் ஒன்றில் 3 படையினர் காயமடைந்திருக்கின்றனர் என்று படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த படையினர் வவுனியா, பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (சி)

## மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடி வீதியில் தேவதை வந்தால்
திருவிழா என்று நினைச்சுக்கோ
காவேரி சில்க்கில் சனக் கூட்டம் என்றால்
மலிவு விற்பனை புரிஞ்சுக்கோ...!

**Mega Sale...**

சகல விதமான
உடுபுடைவைகளை மாபெரும்
மலிவுவிலையில்
அள்ளிக் கொள்ள



**காவேரி சில்க்ஸ்**
48, பெரியகடை, யாழ்ப்பாணம்.



## B.Sc., B.A., B.Com., B.BA

### காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

- பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L இல் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- இப்பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பம்: 29.12.2007
  B.A இல் வரலாறு, அரசியலும் விஞ்ஞானமும், தமிழ், ஆங்கிலம், பொருளியல், Social Science ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவுசெய்யலாம்.
- Bachelor of Computer Application என்னும் பட்டப் படிப்பிற்கும் பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

குறிப்பு:
(1) மார்கழி மாத பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை ஆரம்பம்: 19.12.2007 9 மணி
(2) பரீட்சைகள் யாவும் கல்லூரி பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.
(3) பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகளை 15.12.2007இல் இருந்து அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்.இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை).
T.P.No.- 222 8148, 222 5208

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(68891)



### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06.09.1942

மறைவு
12.12.2006

அமரர்
**துரைச்சாமி குமாரசாமி**

காலா காலமாய் உங்களை
காப்பாற்ற நாங்கள் எண்ணியிருந்தோம்
காலன் வந்து அழைத்ததனால் கலங்கவைத்து
சென்றனையோ அண்ணா!

அரியாலை. தாய், சகோதர உறவுகள்.

(68867)


### பொன். இராமநாதன் குருபூசை வெள்ளியன்று

சுன்னாகம், டிசெ.12

சேர் பொன்.இராமநாதனின் குருபூசை தினம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (கார்த் திகை திருவோணம்) ஆகும்.

அதனையொட்டி அவர் நிறுவிய சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள இராமநாதேஸ்வரர் ஆலயத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகள் அன்றையதினம் காலை 9.30 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)


### காணவில்லை

59, சிவன் புது வீதி, நல்லூரில் வசிக்கும் குமாரசாமி ஜெயராணி என்பவரின் வெள்ளை நிற வளைந்த கொம்பு எட்டுமாத கன்றுத்தாச்சி மாட்டை ஒருமாதமாகவும் செங்கரி நிற முடைய வயிற்றில் வெள்ளைப் புள்ளியும் நெற்றியில் வெள்ளை நிற சுட்டியும் உடைய இளம் மாட்டை 27.11.2007 முதலும் காணவில்லை. கண்டவர்கள் மேற்படி விலா சத்துக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.



### மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்



மேற்படி இருவரும் பதவியுயர்வு பெற்று பொறுப்பதிகாரிகளாக நியமனம் பெற்றதை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. என்.கே. விஜயகுமார்
பொறுப்பதிகாரி [OIC]
புங்குடுதீவு உப அலுவலகம்.
பிரதேச சபை. வேலணை.

செயலாளர்,
உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,
பிரதேசசபை.வேலணை.

திரு. ந. மோகவதூபன்
பொறுப்பதிகாரி [OIC]
நயினாதீவு உப. அலுவலகம்.
பிரதேச சபை .வேலணை.



### கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் எழுதுநராக பணிபுரியும் சி.கணேசமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்.

**திருமதி சிவசுப்பிரமணியம் மகேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திட்டப்பணிப்பாளர்களும், அலுவலகர்களும்.
மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்


# மரண அறிவித்தல்

## Dr.T.N.சண்முகலிங்கம் (Orthopaedic Surgeon)



வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.T.N.சண்முகலிங்கம் (Orthopaedic Surgeon) 07.12.2007 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - முத்துரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் சிவப்பிரகாசபிள்ளை - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் பத்மஜோதியின் அன்புக் கணவரும் **Dr.**ஸ்ரீகரன்(சத்திரசிகிச்சை நிபுணர், போதனா வைத்தியசாலை, கொழும்பு தெற்கு), **Dr.**ஈஸ்வரன் (பொறியியல் பேராசிரியர், அமெரிக்கா), திருமதி சுமதி (கணக்காளர், நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி தேவவிமலா(ஆசிரியை), திருமதி கலாமதி (அமெரிக்கா), கிரிதரன்(கணக்காளர், நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனும் பிரவீன், வருண் ஆகியோரின் பேரனும் இரத்தினசபாபதி(**Formerly of Julius and Creasy, Senior Lawyer, Colombo, Austrilia**), திருமதி பரமேஸ்வரி, திருமதி இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்), பரமானந்தம் (ஓய்வுபெற்ற அதிபர்), சர்வானந்தா(ஆசிரியர்,ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் சகோதரரும் திருமதி பத்மநாயகி(ஓய்வுபெற்ற ஆசிரியை),சி.மு. தம்பிராசா M.phil(ஓய்வுபெற்ற ஆசிரியர்), வை.ஸ்ரீலிங்கம்(ஓய்வுபெற்ற தபால் அதிபர்), திருமதி இந்துமதி (ஆசிரியை, யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தி.), திருமதி அம்பி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.12.2007) புதன்கிழமை மு.ப. 9 மணிமுதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் பிற்பகல் 4 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**12, 1/3 Arethusa Lane,**
**Colombo - 06**
**T.P. 0112362756**
**0775447376**

பரமானந்தம்(சகோதரன்),
சர்வானந்தா (சகோதரன்),
பரமேஸ்வரி (சகோதரி),
வியாபாரி மூலை, பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பித்தலுடன் சமூக உணர்வையும் ஊட்டி மாணவர்களை நல்வழிப்படுத்துவதில் முன்னிற்கும் திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

மாணவர்கள் காட்டும் திறமைகளுக்கு ஏற்ப அவர்களின் புகைப்படங்களுடன் ஆங்கில சொற்பதங்கள் கொண்ட நூல்கள்



பாடசாலையின் முகப்புத் தோற்றம்



புலமைப் பரிசில் கூடிய புள்ளி பெற்ற ஜெயக்குமார் ருசாந்தன்

வெளியிடப்பட்டு மாணவர்களைக் கல்வியில் ஊக்குவிக்கும் செயற்பாடு ஒன்று யாழ்ப்பாணத் திலுள்ள பாட சாலை ஒன்றில் நடைபெறுகின்றது என் பது பலருக்கும் தெரியாமல் இருக்கலாம்.

கடந்தஆண்டு நோய் வாய்ப்பட்டு மரணம் அடைந்த இந்தப் பாடசாலையின் தரம் 3 மாணவனின் நினைவாகவும் ஆங்கிலச் சொற்கள் கொண்ட நூல் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல்கள் மாணவர்களிடையே ஆங்கில அறிவை வளர்க்கும் முகமாக உருவாக்கப்பட்டு இலவசமாக வழங்கப்படுகின்றன.

நன்னெறி ஈந்த விண்ணுலக மாந்தர் என்ற தமிழ் நூலும், விஞ்ஞான செயல் முறைகள் என்ற நூலும் இவ்வாண்டு வெளியிடப்பட்டுள்ளன.

நல்லூர் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட சைவவித்தியாசாலை என அழைக்கப்படும் திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலேயே இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் இடம்பெறுகின்றன. இந்தச் சிறிய பாடசாலையில் இந்தச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றமை பலருக்கு ஆச்சரி யத்தையும் வியப்பையும் ஏற்படுத் தலாம்.

பாடசாலையின் அதிபர் மகேசன் கஜேந்திரன் கடந்த ஆண்டு இந்தப் பாடசாலையின் அதிபராகப் பெறுப்பேற்றுள்ளார். தனது முயற்சியின் மூலம் பாடசாலைக்கு வேண்டிய பல தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றார்.

முன்னர் கைவிடப்பட்ட நிலையில் இருந்த கட்டடம் ஒன்றைப் பெற்றோர் ஒருவரின் உதவியுடன் திருத்தியமைத்து மாணவர்களின் பயன்பாட்டுக்கு ஏற்றதாக மாற்றியுள்ளார் அதிபர்.

1911 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தப் பாடசாலை ஆரம்பத்தில் சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் வகுப்புகளைக் கொண்டிருந்தது. தற்போது தரம் 1 இல் இருந்து தரம் 5 வரை வகுப்புகள் காணப்படுகின்றன.

## மாணவர்களில் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு பல புதிய வழிமுறைகள்

பாடசாலையில் சுற்றாடல் அபிவிருத்தியை நல்ல முறையில் பேணுவதற்கும் சமூக உணர்வை ஊட்டுவதற்கும் சுற்றாடல் நண்பர்கள் கழகம் மாணவர்களினால் உருவாக்கப்பட்டுள்ளது. இவர்கள் பாடசாலை வளாகத்தில் உள்ள குப்பைகளை நாளாந்தம் ஆகற்றுவதுடன் பூங்கன்றுகளையும் பராமரித்து வருகின்றார்கள்.

இதனைக் குறிப்பிட்ட தொகையுடைய மாணவர்கள் மகிழ்வுடன் மேற்கொண்டு வருகின்றமையை நேரடியாகக் காணமுடிந்தது. இதேபோன்று அங்கு கற்கும் ஆசிரியர்களில் இருந்து ஒருநாள் முதல்வர் என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுகிறார். இதன்படி 5 நாள்களுக்கும் 5 ஆசிரியர்கள் முதல்வராகப் பொறுப்பேற்கின்றார்கள். இவர்கள் தமது நாளில் பாடசாலைக்கு நேரத்துடன் வருகை தந்து மலசலகூட துப்புரவு மற்றும் மதிய உணவுக் கடமைகள் உட்பட ஏனைய பணிகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்த ஆண்டு முதல் தடவையாகப் பழைய மாணவர் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அயலில் உள்ள தனியார் காணி ஒன்று பெறப்பட்டு மாணவர்களுக்கு விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன்,மாணவர்களின்தேடலை வளர்க்கும் முகமாக அங்கு பொது இடத்தில் சுமார் 200 இற்கும் மேற்பட்ட பொது வினாக்களும், பத்திரிகைகளில் வெளிவரும் பொது விடயங்களும்வெட்டி ஒட்டப்பட்டுள்ளன. நாளாந்தம் இதில் இருந்து ஒரு கேள்வி பிரார்த்தனை மண்டபத்தில் கூறப்படும். அந்தக் கேள்விக்கான பதிலை மாணவர்கள் எழுதிப் போடவேண்டும். அதிலிருந்து ஒருவர்தெரிவு செய்யப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டும் வருகின்றன.

பாடசாலை ஆசிரியர்கள் தமது பிறந்த நாள் நினைவாக கேக், தேநீர் வழங்குவதை நிறுத்திக் கட்டடத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குத் தமது செலவில் வர்ணம் பூசுவதுடன்பல்வேறு படங் களையும் பாடசாலைச் சுவர்களில் வரைந்து பாடசாலைக்குப் புதுமெரு கூட்டி வருகின்றனர்.

இதேபோன்று ஒவ் வொருநாளும் காலை வேளையில் இசையுடன் கூடிய உடற்பயிற்சி நடைபெறுகின்றது.

ஜெய்கா (JAICA) செயற்திட்டத்தில் இப் பாடசாலையும் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வகுப்பறைகள், வகுப்பறைகளில் உள்ள தளபாடங்கள் மற்றும் பதிவேடுகள் எல்லாம் ஒரே நிறத்தில் வர்ணம் பூசப்பட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் கட்டடத் தொகுதியில் உள்ள கட்டடம் ஒன்றில் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு விளையாட்டுடன் கூடிய கற்றலுக்கும் அது வழிவகுக்கின்றது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இந்தாண்டு இரு மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். இதில் ஒரு மாணவனின் பெற்றோர் வாய்பேசமாட்டார்கள்.



சுற்றாடல் நண்பர்கள் கழகம்

அவர்களுக்குக் காதும் கேட்காது. பொருளாதாரத்திலும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள். செல்வன் ஜெயக்குமார் ருசாந்தன் என்ற இந்த மாணவன் 157 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதல் இடத்தையும் செல்வன் கனகலிங்கம் சரண்ராஜ் 146 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.




1993 ஆம் ஆண்டு ஆகக் கூடுதலாக 15 மாணவர்கள் இந்தப் பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தினார்கள்.

இதனைத் தொடந்து இப் பாடசாலையில் இருந்து சம காலத்தில் புலமைப் பரிசில் பயிற்சி வகுப்புகளை நடத்திய ஆசிரியர்கள் இருவரும் அதிபரும் ஒய்வுபெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

-பவித்திரன் -

170 மாணவர்களையும் பத்து ஆசிரியர்களையும் கொண்ட இப் பாடசாலையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான ஆங்கில ஆசிரியர்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. தொண்டர் ஆசிரியராக இருந்த ஒருவரும் கூடப் பகுதிநேர ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்று வேறு பாடசாலைக்கு கல்வித் திணைக்களத்தினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இது மாணவர்களின் ஆங்கிலக் கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கட்டடங்களைப் பொறுத்த வரையில் 1979 ஆம் ஆண்டு காலத்தில் நல்லூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் மு.சிவசிதம்பரம் இரண்டு மாடிக்கட்டடத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்து கட்டடம் கட்டப்பட்டது. அதிலும் மேல் மாடியில் சுமார் 30 அடிக் கட்டடம் பூர்த்தி அடையாமல் 18 வருடங்களாக மழைநீர் தேங்கி சேதம் அடைந்துள்ளது.

சதுரங்கக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டு மாணவர்களுக்கு ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் அது பயிற்றுவிக்கப்படுகின்றது.

பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடையும் மாணவர்களுக்கு உதவி செய்யவெனப் பாடசாலையின் பழைய மாணவனும் முன்னாள் கல்விப் பணிப்பாளரான அமரர் வே.சபாநாயகத்தினால் குறிப்பிட்ட நிதி வங்கியில் இடப்பட்டுள்ளது. அதில் இருந்து பெறப்படும் நிதி மூலம் ஆறாயிரத்தி ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாது புலமைப்பரிசில் நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

பாடசாலைப் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்துச் செல்வதில் பெரும் இக்கட்டான நிலை காணப்படுகின்றது. கடந்த சில மாதங்களில் பிள்ளைகளின் குடிதண்ணீர் பயன்பாட்டிற்கு வைக்கப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரமும் சில பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

இதன் காரணமாகப் பாடசாலை நிர்வாகத்தினர் இவற்றைக் கொள்வனவு செய்வதில் பெரும் நெருக்கடிகளையும் கஷ்டங்களையும் எதிர் கொள்கின்றார்கள். எனவே கல்வி அதிகாரிகள் அக்கறை கொண்டு இந்தப் பாடசாலைக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க முன்வர வேண்டும். ★

# புதிய கல்விச் சீர்திருத்தத்தின் '3T', '5E' மாதிரிக் கற்பித்தல், கற்றல் செயற்பாடுகள்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

வகுப்பறையில் 'நிலைமாறும்' ஆசிரிய வகிபாகத்தினூடாக '5E' கற்றல் கற்பித்தல் செயற்படும் விதத்தைப் பின்வருமாறு விளக்கலாம்.

★$E_1$ - **Engargement** (ஈடுபடுத்தல்)

ஆசிரியர் பல்வேறு புத்திகளைக் கையாண்டு மாணவர்களைக் கற்றலுக்குத் தயார்படுத்தி கற்றலில் ஈடுபடுத்துவதை விளக்கும். உதாரணமாகப் பல்வேறு நிலைகளிலுள்ள மாணவர்களை, கதை கூறுதல், புகைப்படங்கள் காண்பித்தல், துணுக்குகளைக் கூறுதல் மூலம் கவனத்தைத் தன்பால் ஈர்த்து கற்றலில் ஈடுபடுத்தல் வேண்டும்.

இந்தச் செயற்பாடுகள் கற்றல் அலகுடன் தொடர்புடையதாக இருப்பது சிறப்பு.

★$E_2$ - **Exploration** (கண்டாய்வு செய்தல்)

மாணவர்கள் குழுவாகச் செயற்பட்டு, ஏதாவது ஒரு விடயம் பற்றிக் கண்டாய்வில் ஈடுபட்டு, அனுபவத்தின் மூலம் தேர்ச்சியைப் பெறுவர். மாணவர் அனுபவத்தைப் பெற ஆசிரியர் வழிகாட்டுபவராக இருக்க வேண்டும். நியதிகள் அடிப்படையில் கணிப்பீட்டில் ஈடுபடவேண்டும்.

★$E_3$ - **Explanation** (விளக்குதல்)

மாணவர் கண்டாய்வின் மூலம் பெற்ற அனுபவங்களை/ விடயங்களை அறிக்கையாக அல்லது விடையாகத் தயாரித்து விளக்கமளிப்பர். ஒவ்வொரு குழுவிலுள்ள மாணவர் கண்டாய்வு பற்றிய நிறைகுறைகளை எடுத்துக் கூறி அனுபவங்களைப் பெறவேண்டும். இதற்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

★$E_4$ - **Elobration** (விரிவுபடுத்தல்)

குழுமுறையில் மாணவர் கண்டாய்ந்து கொண்ட விடயங்களை மாணவர், ஆசிரியர்களால் விளக்கமளிக்கப்பட்டதற்கேற்ப மாணவர் மேலும் விரிவுபடுத்தி அனுபவங்களைப் பெற்றுக் கொள்வர்.

★$E_5$ - **Evaluvation** (மதிப்பீடு)

**என்.பி.ஸ்ரீந்திரன்**
(சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்,சுன்னாகம்).

கற்பிக்கப்பட்ட அலகு தொடர்பில் மாணவர் எவ்வளவு கற்றல் அனுபவத்தைப் பெற்றுள்ளனர் என்பதை ஆசிரியர் நியதிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்ய வேண்டும்.

இங்கு ஆசிரியர் வகிபாகம் நீதிபதியை ஒத்ததாகக் காணப்படும். புள்ளித் திட்டத்தின் அடிப்படையில் மதிப்பீடு இடம்பெற வேண்டும்.

இவ்வாறு ஆசிரியர் வகிபாகம், '5E' முறைக்கேற்ப 5படி நிலைகளில் மாற்றம் பெற்று வருவதனால், இதனை 'நிலை மாறும்' ஆசிரியர் வகிபாகம் என அழைப்பர்.

இந்த '5E' முறைமையானது, பாரம்பரியக் கற்றல், கற்பித்தல் முறைமைகளில் காணப்படும், சிந்திக்கும் ஆற்றலின்மை, மாணவரின் தனிப்பட்ட திறனின்மை, முயற்சியாண்மையின்மை, மாற்றங்களிற்கு இணக்கமின்மை, பொறுப்புக்கூறும் பொறுப்பேற்கும் தன்மையின்மை, சுய ஒழுக்கமின்மை, கற்றலுக்காகக் கற்றலின்மை, முதலான குறைபாடுகளை மாற்றியமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை ஆசிரியர் சரிவர விளக்கி, போதிய முன்னாயத்தத்துடனும், அர்ப்பணிப்புடனும், செயற்படுத்தும்போது தான் எதிர்பார்க்கப்படும் கற்றல் தேர்ச்சிகளையும், பொதுத் தேர்ச்சிகளையும் மாணவர் அடையமுடியும்.



*பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் வித்தியாலய புதிய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.*

*விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் அதிபர் ஏ.ஜெகநாதன், பழைய மாணவர் சங்கத்தலைவர் சட்டத்தரணி சபா.ரவிந்திரன் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.சிவஞானசுந்தரம், கலைப்பிரிவு மாணவன் என்.நிஷாந் துக்குப்பரிசு வழங்குவதைஇரண்டாவது படத்திலும் காணலாம்.* [115]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரவிழிகளுடன் ஈராண்டில்.....

மண்ணுலகில் 13 ★ 11 ★ 1942



விண்ணுலகில் 12 ★ 12 ★ 2005

## அமரர் ம.ஞா.சேவியர்


(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)

*அன்பின் ஆலயமாய் பண்பின் உறைவிடமாய்*
*அவனியில் எமை வளர்த்த எம் அன்புத் தந்தையே!*
*பாரினில் உங்கள் சேவை போதும் என்று தானோ*
*பரலோக வாழ்விற்கு நீர் அழைக்கப்பட்டீர்!*
*விண்ணுலகில் நீர் இறைவனோடு சேர்ந்து வாழ்ந்திட*
*மண்ணுலகில் நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

ஆறாத்துயருடன்:
130,4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (68861)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 11 1919



மறைவு 23 11 2006

## அமரர் சங்கரப்பிள்ளை கார்த்திகேசு

(இளைப்பாறிய ஆசிரியர், யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி)

திதி: திருதியை 12.12.2007

ஆண்டொன்று கடந்தது ஐயா!
அன்பு முகம் மறந்ததில்லை
நீண்ட வழிநீர் சென்றீர்
நமதுள்ளத் தவிப் பாறவில்லை நீர்
காட்டிய வழிநாம் நடந்தே
காசினியில் நும்போலப் பணி செய்தால்
நாட்டிய மோட்ச வழி நல்லபடி யமைந்து
நயம் பெறுவீர் என்றெண்ணி
நாமமைதி கொள்ளுகிறோம்.

பாடசாலை ஒழுங்கை, மல்லாகம். (68816)
என்றும் உங்கள் நினைவுடன்: குடும்பத்தினர்.

## கலாபூஷணம் விருது வழங்கும் நிகழ்வு சனியன்று கொழும்பில்

குருநகர்,டிசெ.12

2007ஆம் ஆண்டிற்கான கலாபூசண விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு ஆனந்த குமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சு கலாசார அலுவல்கள் திணைக் களம் வருடாவருடம் வழங்கிவரும் "கலா பூஷணம்" விருதைப் பெற பாஷையூர் இசை நாடக கலைஞர் வஸ்தியாம்பிள்ளை ஜேக்கப் (அல்பிரட்), குருநகர் நியோ கவுன்சில் இயக்குநர் எஸ்.கொன்ஸ்ரன்ரைன் (குருநகர் துரை) ஆகியோர் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (202-51)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
**நல்லூர் பாம் சென்ரர்,**
*19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.* (68844)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக் கொடுக்கப்படும். இருபிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 850/=

BHARATHI PATHIPPAKAM
OFF - SET PRINTERS
430, K.K.S Road Jaffna
Phone: 021 222 3081

## இறைச்சிக்கோழி

3Kg விற்கு மேற்பட்ட புறொயிலர் 1Kg 450/-, சுத்தம் செய்தது 650/-. வியாபாரிகளுக்கு விலை குறைக்கப்படும். (சுத்தம் செய்தல் இலவசம்)

1. NEW R.S.K FARM- மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. NEW R.S.K FARM- கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். (கொமர்சல் வங்கி அருகில்) (68707)

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 13.12.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ★ **ராஜீவ்** - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- ★ **மதுரா** - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- ★ **P.ரவி** - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
- ★ **திருமகள் களஞ்சியம்** - சிவலிங்கப்புளியடி.
- ★ **சிற்றி பாம் ரேடர்ஸ்** - கல்வியங்காடு.

(68977)

## தரம் 6 முதல் O/L வரை

## English Literature and Language

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன
(அனுமதிக்கு பெற்றோர் வருகை அவசியம்)

**A/L, G.A.Q, B.A. இற்கான English Literature, Language** வகுப்புகள் நடைபெறுகின்றன.

தொடர்பு:
K.Subramaniam,
No.62, Palam Road,
Kantharmadam, Jaffna. (68843)

## மலிவு விற்பனை

நல்லின ஒட்டு எலுமிச்சம் கன்றுகள், நல்லின ஒட்டு விலாட் மாங்கன்றுகள் மலிவு விலையில் விற்கப்படும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**அதிபர்**
**யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம்.** (68864)

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் 2008ஆம் ஆண்டுக்கான பொருள்கள், சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

யாழ்.போதனா வைத்தியசாலையில் 2008ஆம் ஆண்டில் பொருள்கள் வழங்குநர்களையும் சேவை வழங்குநர்களையும் பதிவு செய்வதற்கு பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள், விற்பனை முகவர்கள், அரச நிறுவனங்கள், அரச சபைகள், பதிவு செய்யப்பட்ட வியாபார ஸ்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை *பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு 24.12.2007 அன்று முற்பகல் 10 மணிக்கு அல்லது அதற்கு முன்பதாக அனுப்பிவைக்கும்படி கோரப்படுகின்றனர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும்
குறியீடு (A) பொருள்கள் வழங்குதல்
குறியீடு (B) சேவை வழங்குதல்
குறியீடு (C) வாகன சுத்திகரிப்பு, வாகனத்திருத்தம் என்பவற்றின் கீழ்வரும் ஒவ்வொரு வகையானவற்றுக்கும் தனித்தனியாக ஒவ்வொன்றுக்கும் 100 ரூபா வீதம் எமது காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

பொருள்கள் வழங்குநர்களும் சேவைகள் வழங்குநர்களும் ஒரு மாத கால கடன் அடிப்படையில் பொருள்களையும் சேவைகளையும் வழங்குதல் வேண்டும்.

கூறுவிலை கூறும்போது பதிவுசெய்யப்பட்ட விநியோகத்தர்களும் சேவை வழங்குநர்களும் தமது கூறுவிலைகளை கண்டிப்பாக குறிப்பிடவேண்டும். பணிப்பாளர் வெளியாரிடமிருந்து கூறுவிலை கூறுவதற்கு உரிமை கொண்டிருப்பார் என்பதும் அறிவிக்கப்படுகிறது.

### (A) SUPPLIES

01. Stationery Items with Local and imported computer stationery, printed computer stationery, photocopy papers, C.R.Books, ball point pens, Pencils envelops items, Carbon papers, white papers Staplers, correcting fluids, stencils, diskettes magnetic tapes, computer materials, including printer ribbons and papers, diskettes, toner cartridges, Glue cubes and liquid glue.
02. Furniture (Wooden)
03. Furniture (Steel)
04. Mats/ Brooms and Ekel Brooms
05. Coir Mattress and rubber mixed coir mattress (Rubberized)
06. All Type linen items, Mackintosh and clothing items, Plastic and Nylon cords
07. All Aluminum items and Household equipment
08. Ceramics Glassware Items
09. Paint, Varnish and floor polish, surgical spirit and Nail items
10. Washing soda, Cleaning Detergents, Vim, Harpic, Shaving blades and Matches
11. Building Materials
12. Spare parts of the all type of Vehicles
13. Plumping Items, P.V.C. Pipe & etc
14. All type of Batteries
15. Leather and Leather products
16. Hardware items, Pad lock, Galvanized Bucket and Nails etc
17. Electrical Appliances Air Conditionners, Refrigerators, Ceiling fans & Pedestal Fans, Buebs etc
18. All type of Rexene and polythene items
19. Drugs and Milk food items
20. Rubber - stamps items
21. Computers and related accessories
22. Dressing
23. Surgical Consumables
24. Surgical Instruments
25. Surgical equipments
26. Dental Consumables
27. Laboratory Equipment
28. Carpentry Items (All type of wood, Planks, etc)

### (B) Services

01. Repairs of Steel Furniture
02. Repairs of Wooden Furniture
03. Repairs of Electrical appliances (Air Conditioners, Refrigerators & Deep Freezers. Repairs and services of Typewriters, Calculators, Roneo machines, Computers and printers
04. Printing (All type of forms)
05. Repairs of surgical appliance X-ray machine and all the Hospital equipment
06. Rewinding of Electrical motors, Fans & etc.
07. All kinds of Mechanical equipment services, Maintenance and repair
08. Gas/ Oxyen equipment services and repair (Gas Burners and Gas Coockers)
09. Water Pump Sewerage Machine repairs and maintenance
10. Repairs of Water supply and Toilet pipes
11. Disposal of Hospital Carbage
12. Sewing works
13. Maintenance of official Identity card and rubber stamp
14. Repairs of Buildings

### (B) VEHICLES

01. Repairs, Electrical Works and cushions works of the all type of the Vehicles
02. Services of all type of Vehicles

**Dr.A.E.Gnanajothy,**
Director,
Teaching Hospital, Jaffna.

(C/54676)

## COMPUTER EXPRESS
### INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 40% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~2,750~~/= 1,650/= | Honours Diploma in Computer Science, 5 Months, ~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing, 4 Months, ~~2,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~2,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~2,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~2,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD, 3 Months, ~~2,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office, 3 Months, 1,000/= | Accounting Package, 3 Months, ~~2,250~~/= 1,650/= |

**50% Off ADVANCE COURSES**

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ் வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

இவ் ஆண்டின் இறுதிபிரிவுகள் ஆரம்பமாகிறது.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :14/12/2007
Batch II :15/12/2007
Batch III :16/12/2007
Batch IV :19/12/2007
AM 09:00

## மணமகன் தேவை

1981ஆம் ஆண்டு பிறந்த, அரசாங்க நிறுவனத்தில் நிரந்தர வேலை செய்யும் 5 அடி உயரமும் கார்த்திகை நட்சத்திரம், இடப இராசி, 16 பாவமுடைய பொது நிறமுடைய பெண்ணுக்கு பெற்றோர் 1975ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த இந்து கௌரவ பட்டதாரி அல்லது வெளிநாடு மணமகனைத் தேடுகிறார்கள். முழு முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.
*விளம்பர இல 3036, மே.பா. உதயன்.*

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் 8 மாத, டோமன் 6மாத குட்டிகளும் நாய்க்கூடும் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் பி.ப. 4.30 - 6.30

**M.K.S. Medical Clinic,**
*பொற்பதி வீதி, கொக்குவில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் குண்டுகளை வீசுவதனாலோ யுத்தத்தாலோ சமாதானத்தை நிலைநிறுத்த முடியாது

## பிரதம நீதியரசர் சொல்கிறார்



கொழும்பு,டிசெ.12

வடக்கு, கிழக்கில் மக்கள் பிரச்சினைகளுக்குள்ளாகி வருகின்றனர். அங்கு குண்டுகளை வீசுவதன் மூலமோ யுத்தத்தின் மூலமோ சமாதானத்தை நிலைநிறுத்த முடியாது. மனித உரிமைகளை அமுல் படுத்துவதன் மூலமே நாட்டில் சமாதானத்தை எய்த முடியும் எனப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கொழும்பில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தப்பட்ட விசேட கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:

மனிதனை மனிதன் அடக்கி ஒடுக்க முற்படுகின்ற வேளையிலேயே அவனது உரிமைகள் மீறப்படுகின்றன. இந்த தனிமனித உரிமை முறையாக வழங்கப்படாததன் அல்லது பேணப்படாததன் காரணத்தினாலேயே நமது நாட்டில் பாரிய யுத்தமொன்று உருவெடுத்துள்ளது. அத்துடன் நமது நாடு பல சவால்களையும் எதிர்கொண்டுள்ளது. யுத்தம் அதிகரிக்குமானால், அங்கு சமாதானத்தை காணமுடியாது. யுத்தத்தின் தன்மை பெருகிச் செல்லும்போது சமாதானத்திற்கான சந்தர்ப்பம் குறைவடைந்தே செல்லும்.

மனித உரிமை என்பது சாதி, மதம், இன பேதம் கடந்த ஒன்று. இதனைப் பெற்றுக்கொள்ள யாவருக்கும் உரிமை உண்டு. சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற பாகுபாடு இதில் காட்டப்படுவதில்லை. இப்படியான பாகுபாடுகளின் உச்சக் கட்டமே ஒருவரை ஒருவர் அடக்கி ஒடுக்க முற்படுவதலாகும். இந்த நிலை தோன்றாமலேயே இருந்திருந்தால் இலங்கையில் இன்று தோன்றியுள்ள இக்கட்டான நிலைக்கு இடமிருந்திருக்காது. யுத்தமும் உருவெடுத்திருக்காது. சகலருக்கும் சமமாக பெற்றுக்கொள்ளக் கூடிய மனித உரிமைகள் எவருக்காவது ஊறு விளையும் இடத்து அவர் அது தொடர்பாக நீதிமன்றத்தில் முறையிட்டு அதற்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (202)

**மனித உரிமைகளை அமுல்படுத்துவதன் மூலமே சமாதானத்தை எய்த முடியும்**



இந்தியாவில் பெண்களுக்கான யோகாசனப் போட்டி நாடு தழுவிய ரீதியில் நடத்தப்பட்டுவருகிறது. உத்தாஞ்சல் மாநிலம் - ஹரித்துவாரில் இந்தப் போட்டி இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு வருகை தந்தோரை பரவசப்படுத்திய அழகுச் சிறுமி.

# பயங்கரவாதிகளின் இறுதி மூச்சு முடியும் வரை அவர்களுக்கு எதிராக நாம் போர் தொடுப்போம்

## ஜப்பானில் ஜனாதிபதி தெரிவிப்பு



டோக்கியோ, டிசெ.12

பயங்கரவாதிகளின் இறுதி மூச்சு முடியும் வரை, அவர்களுக்கு எதிராக நாம் போர் தொடுப்போம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜப்பான் சென்றுள்ள ஜனாதிபதி டோக்கியோவில் உள்ள சிக்காவா பிரின்ஸ் ஹோட்டலில் இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

எமது அரசு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றதென சுயலாபம் தேடும் கட்சிகள் பரப்புரை செய்து வருகின்றன.

மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு பயங்கரவாதம் அழிக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நாம் மேற் கொண்டு வருகிறோம். எவ்வாறான இடையூறுகள் வந்தாலும் பயங்கரவாதத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் இருந்து ஒருபோதும் பின் வாங்கப் போவதில்லை-என்றார் ஜனாதிபதி. (50)

## நவாலி கிழக்குப் பிரிவில் நிவாரண அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

நவாலி கிழக்கு ஜே/135 கிராம சேவையாளர் பிரிவில் உலக உணவுதிட்டத்தின் கீழ் நிவாரணம் பெற்று வருபவர்களுக்கான வெள்ளை நிற நிவாரண அட்டைகள் தற்போது அப் பிரிவு கிராம சேவையாளர் ரி.நித்தியானந்தத்தினால் அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது குடும்பப் பதிவு அட்டையைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (202-100)

## வல்லிபுர ஆலய தேர் புனரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர் திருத்திப் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை ஆலய அறங்காவல் சபை மேற்கொண்டுள்ளது. (202-218)

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும்

# இடைக்கால நிர்வாக அமைப்பு ஏற்படுவதை இந்தியா ஆதரிக்கும்

## இராணுவத் தீர்வுக்கு புதுடில்லி கடும் எதிர்ப்பு

கொழும்பு,டிசெ.12

இலங்கையின் வடக்குக் கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக அமைப்பொன்று- வடக்கிற்கும் கிழக்கிற்கும் தனித்தனியாகவோ அல்லது இணைப்பாகவோ ஏற்படுத்தப்படுவதை இந்தியா வரவேற்பதாகத் தெரிகின்றது. இவ்வாறான ஓர் அமைப்பின் மூலம் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களுக்கு அம்மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் அரசாங்கம் அமைய முடியும் என்று இந்தியா கருதுகின்றது.

அதிகார பரவலாக்கல் தொடர்பாக ஆலோசித்து முடிவெடுப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள சர்வகட்சி பிரதிநிதிகளின் செயற்பாட்டில் இந்தியா அதிருப்தி கொண்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

### இந்திய பிரதமர் வருவது சாத்தியமா?

இந்திய பிரதம மந்திரி மன்மோகன் சிங் எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய திட்டமிட்டிருக்கிறார் என்ற இலங்கை அரசின் அறிவிப்பு இந்திய அரச வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயம் அந்நாட்டின் இனப்பிரச்சினையில் தெளிவானதொரு முன்னேற்றம் காணப்பட்ட சூழ்நிலையில் மட்டுமே இடம்பெற வேண்டும் என்பது இந்திய அரச வட்டாரங்களின் விருப்பமாக உள்ளதே இதற்குக் காரணமாகும்.

இலங்கையின் 60 ஆவது சுதந்திர தின விழாவில் கலந்துகொள்ள மன்மோகன் சிங் வருவார் என்று இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் ரோகித போகொல்லாகம அறிவித்திருப்பதாவது உரிய காலத்துக்கு முந்திய அறிவிப்பாகும் என்று இந்திய பிரதமரின் நிலைப்பாடுகள் பற்றி அறிந்தவர்கள் கருதுகிறார்கள்.

1987 ஆம் ஆண்டு ராஜீவ் காந்திக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் அமைதித்தீர்வு தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்குப் பிறகு இரு தரப்பு விவகாரங்கள் தொடர்பாக பேசுவதற்கும் இந்தியப் பிரதமர் எவரும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதில்லை. சார்க் உச்சி மகா நாடுகளில் கலந்து கொள்வதற்காக பி.வி. நரசிம்மராவும் எல்.கே. குஜராலும் விஜயம் செய்திருக்கிறார்கள். எனவே பிரதமர் மன்மோகன் சிங்கின் விஜயம் இடம்பெறுமானால் இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாக இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்குச் செல்வது 20 வருடங்களில் முதல் விஜயமாக இருக்கும்.

ஜனாதிபதி ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த பிறகு 4 தடவைகள் இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

### இராணுவத் தீர்வை ஆதரிப்பதாகிவிடும்

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதை இந்திய அரச தரப்பில் எவரும் எதிர்க்காத போதிலும் இப்போதைய சூழ்நிலையில் அவ்வாறான விஜயம் ஒன்று மேற்கொள்ளப்படுமானால் இப்பிரச்சிரனைக்கு இராணுவத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு ஆதரிப்பதாக அமைந்து விடலாம் என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

இலங்கையின் அதிகாரப் பரவல் நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடுகளில் போதிய அளவு முன்னேற்றம் காணப்படவில்லை என்று இந்திய அதிகார வட்டாரங்கள் அதிக கவலை கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. அதிகாரப் பரவல் இலங்கையின் எதிர்கால முன்னேற்றத்துக்கு மிக அவசியம் என்று புதுடில்லியில் கருதப்படுகிறது.

இழுபறிக்குள்ளாகியிருக்கும் இனப்பிரச்சினை தொடர்பாக சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும். அந்நிலையிலேயே இந்திய பிரதமர் அங்கு விஜயம் செய்து அமைதி செயற்பாட்டுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு ஏதும் செய்யக் கூடியதாக இருக்கும் என்று இந்திய அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. (அ-ப)

## நவம்பர் மாத விநியோகம் 14 ஆம்திகதி ஆரம்பம்

குடாநாட்டில் இடம் பெயர்ந்த மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கான நவம்பர் மாதத்துக்கான நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நவம்பர் மாதத்துக்குரிய விநியோகத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் சகல ப.நோ. கூ.சங்கங்களையும் கேட்டுள்ளார். (1)

## நள்ளிரவில் புகுந்து தொலைக்காட்சி திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 12

நள்ளிரவு வேளை வீடொன்றுக்குள் புகுந்த திருடன் வீட்டினுள் இருந்த தொலைக்காட்சிப் பெட்டியைத் திருடிச் சென்றுள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மாதனையிலுள்ள ஒரு வீட்டிலேயே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது. இத் திருட்டு இடம்பெற்ற வீட்டில் இளைஞரொருவரின் அடையாள அட்டையொன்று கண்டெடுக்கப்பட்டு அந்த அடையாள அட்டை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (1-218)

## புலிகளுக்கு படகு வாங்கச் சென்றதாக சென்னையில் இரண்டு பேர் கைது

விடுதலைப் புலிகளுக்கு படகுகளைக் கொள்வனவு செய்ய வந்தவர்கள் என்று கருதப்படும் இருவரும் அவர்களுக்கு உதவியவர்கள் எனக் கருதப்படும் ஒருவரும் சென்னையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜேம்ஸ் என அழைக்கப்படும் ராஜா (வயது 46-மன்னார்), ஜெயக்குமார் என அழைக் கப்படும் கௌரி சங்கர்(வயது 34-வல்வெட்டித்துறை) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கினார் எனக் கருதப்படும் ரவிக்குமார் (வயது42- சூளைமேடு, சென்னை) என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகளுக்கு தேவையான படகுகளைக் கொள்வனவு செய்யும் நோக்குடன் இவர்கள் இந்தியா வந்திருந்தனர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (...)





வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்வி பிரிவின் ஏற்பாட்டில் அண்மையில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெற்ற செயலமர்வில் முறைசாரக் கல்விப் பிரிவின் செயற்திட்ட அலுவலர் ந.சண்முகராஜா உரையாற்றுவதையும், வளவாளர்கள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட பெற்றோர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு அனுமதிக்கவில்லை என்பதற்காக சர்வதேசம் தலையிடாமல் இருப்பது நியாயமாகாது

## நடவடிக்கை எடுக்க ஆசிய ஆணைக்குழு வலியுறுத்துகிறது

கொழும்பு, டிசெ. 12

இலங்கை அரசு தன்து மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச அமைப்புகள் தலையிட்டு கண்காணிப்பு செய்வதை அனுமதிக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக சர்வதேச சமூகம்நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வாளாவிருப்பது நியாயமாகுமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறது ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு.

இலங்கையில் இடம்பெற்று வரும் ஆள் கடத்தல்கள், படுகொலைகள் முதலியவற்றைத் தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் உடனடியாகத் தலையிட வேண்டும்என்று ஆஸிய மனித உரிமை ஆணைக்குழு விடுத் துள்ள அறிக்கையொன்றில் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்துள்ள மேற்படி அறிக்கையில் ஐ.நா. சபைக்கு கிடைத்துள்ள அறிக்கைகளின்படி உலகில் இலங்கையில் மட்டுமே அதிகமான ஆள்கள் கடத்தப்படும் சம்பவங்கள் இடம்பெறுவதாக அறிய வந்துள்ளது. இப்போதைய நிலைமை உடனடியாகப் பரிசீலிக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது என்றுதெரிவித்துள்ளது.

இலங்கையில் எந்தப் பகுதியிலும் அரச படைகளின் ஆதிக்கத்தில் அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்திலுள்ள பகுதிகளில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எதுவித ஆய்வுகளும் நடைபெறுவதாகத் தெரியவில்லை என்று கவலை வெளியிட்டுள்ள ஆஸிய மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப் பெற்றிருப்பது வெறும் கண்துடைப்பு செயற்பாடு என்று ஆணைக்குழு கண்டித்துள்ளது. (ப)

# திருநெல்வேலிச் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு; சுகாதார வைத்திய அதிகாரியின் நிலைப்பாடு

திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் நிலவும் சுகாதார சீர்கேடுகள் பல வியாபாரிகள், நுகர்வோர் பெரும் சிரமம் என்ற தலைப்பில் 21.11.2007ஆம் திகதியன்று உதயன் பத்திரிகையின் 7ஆம் பக்கம் வெளியான செய்தி தொடர்பாக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பின்வரும் விளக்கத்தை அனுப்பியுள்ளார்.

திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் திருநெல்வேலி மரக்கறிச் சந்தையைக் கிரகமாக மேற்பார்வை செய்து வருகின்றார். இவ்வுத்தியோகத்தர் அவதானித்த சுகாதார குறைபாடுகள் சம்பந்தமாக எனக்கு அறிக்கையிட்டு, நல்லூர் பிரதேசசபை செயலாளருக்கு அறிக்கை உப தபாலகம் கோப்பாய் ஊடாக 4871 இலக்க பதிவுத் தபால் மூலம் 12.10.2007 அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சந்தையின் திருத்தங்கள், பராமரிப்பு வேலைகளுக்குரிய நிதிகளை ஒதுக்குவது நல்லூர் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மழைக்காலத்தை கருத்தில்கொண்டு சந்தைப் பகுதியில் நீர் தேங்குவது தொடர்பாகவும் வடிகால் அமைப்புகள் பற்றியும் அவை சீர் செய்வது தொடர்பிலான தற்காலிக செயற்பாடுகள் பற்றியும் அறிக்கையில் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தங்களின் செய்தியின் இச் சுகாதார சீர்கேடுகளுக்கு எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம். தாங்கள் இவ்விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளமையை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம். எனினும் சம்பந்தப்பட்ட பகுதியினரை சுட்டிக்காட்டாத நிலையில் எமது திணைக்களத்தின் தமது கடமைகளைப் பொறுப்புடன் செயலாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு இவ்வாறான செய்திகள் மனவேதனைடைய செய்யும் என்ற வகையில் எமது நிலைப்பாட்டை முன்வைத்துள்ளேன் என்பதை அறியத்தருகின்றேன்.

## வரணியில் சட்டவிரோத மணல் அகழ்வு தீவிரம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

வரணி, கரம்பைக்குறிச்சிப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரித்துள்ளது.

தினமும் 50இற்கும் மேற்பட்ட வாகனங்களில் மணல் ஏற்றிச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் பெருமளவு வாகனங்கள் செல்வதால் இவ்வருடம் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வெங்க ராயன் வயல் வீதி மோசமாக சேதமடைந் துள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

(202-207)

# கொழும்பு விமானப் பயணிகள் எதிர்கொள்ளும் சிரமங்கள்




யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு கடமையின் நிமித்தமோ நோய் நிலையின் காரணமாகவோ செல்வதற்கு இதுவரை அர சாங்கத்தினால் விமானப் போக்குவரத்துச் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை. வர்த்தக நோக்குடைய தனியார் விமான சேவைகளே இயங்குகின்றன. இதனை சாதாரண மக்கள் பயன்படுத்துவது பொருளாதார ரீதியில் கடினமானதாகவே உள்ளது. இதற்குத் தீர்வாக (UNHCR) போன்ற சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் பொது மக்களுக்கான விமானப் போக்குவரத்தினை அரசாங்க அதிகாரிகள் ஏற்பாடு செய்தால் மக்கள் பயனடைவார்கள்.

ஐ.சி.ஆர்.சி இன் உதவியுடன் வெள்ளிக்கிழமைகளில் விமான சேவை உள்ளது. ஆனால் கொழும்பில் வெள்ளிக்கிழமை நடைபெறும் முக்கிய நிகழ்வில் கலந்து கொள்வதென்றால் முதல் வெள் ளிக்கிழமை பயணித்து இரண்டு கிழமைகள் கொழும்பில் தங்கியே மீளவேண்டியுள்ளது.

பாதுகாப்பு காரணங்களிற்காக பயணப் பத்திரங்கள் உறுதிப்படுத்தப்படல், புகைப்படம் எடுத்தல் என்பன மனிதநேய அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். குறிப்பாக இளம்பெண்களைப் படம் பிடிப்பது மிகவும் உணர்வுபூர்வமானது. மேலும் ஒருவரின் அனுமதி இன்றி புகைப்படம் எடுத்தால் சட்டவிரோதமானது. எனவே போக்குவரத்து அனுமதிக்கான புகைப்படத்தினை பயணியிடம் இருந்து பெறுதலே நல்லது. கடமைக்காக மாதாந்தம் பயணம் மேற்கொள்ள இருப்பவர்கள் தினமும் பயணத்திற்காக அனுமதி பெற பல நாள்களை விரயமாக்க வேண்டியுள்ளது. எனவே ஒருவரது புகைப்படத்துடன் கூடிய உள்நாட்டு பயண அனுமதிப் புத்தகத்தினை வழங்கினால் பயணிகளுக்கு பாதுகாப்பும் உறுதியாக இருக்கும். மீண்டும் மீண்டும் அலைந்து திரியும் வேலையும் இருக்காது.

விமானப் பயணிகள் தங்குவதற்காக யாழ். பழைய புகையிரத நிலையக் கட்டடமே உபயோகிக்கப்படுகிறது. அங்கு ஒரு அறையில் ஆடுகளும் மறு அறையில் நாய்களும் வெளி விறாந்தையின் ஒரு கரையில் பயணிக்க நிற்பவர்களும் மறு கரையில் பயணித்து வந்தவர்களும் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டி உள்ளது. மேலும் இடிந்த நிலையில் உள்ள கட்டடத்தில் இருந்து மழைநீர் சிற்றருவிபோல் பயணிகளின் தலையில் சிலவேளைகளில் விழுகின்றது. இந்த நிலை மாற்றம் பெற வேண்டும்.

யாழ்ப்பாணப் பயணத்திற்காக அதிகாலை 3 மணியில் இருந்து மறுநாள் 2 மணி வரை நேரத்தினை செலவு செய்ய வேண்டியுள்ளது. இது நோயாளிகளுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும் குழந்தைகளுக்கும் மிகுந்த சிரமத்தினையே கொடுக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் எத்தனையோ ஆயிரம் முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளனர். அனுபவம் முதிர்ந்த அரச அதிகாரிகள் உள்ளனர். யாழ்.மக்களுக்கு உள்ள ஒரே ஒரு இலகுவான பயணப் பாதையான விமானப் போக்குவரத்தினை இலகுவானதாகவும் நட்பு முறையிலும் அமைய இவர்களால் உதவமுடியும்.

**யாழ்ப்பாணம்.** *டாக்டர் சி.யமுனானந்தா.*


**இதோ,**

**ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!**

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**மதுகா**

*மதுசாரமற்ற மூலிகை இருமல் பாணி*

யாழ். குடாநாட்டின் அனை[illegible] பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SriLanka Ayurvedic Drugs Corporation**
Nawinna,
Maharagama. (சி/54598)

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
*இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)






# 31ஆம் நாள் நினைவலைகளும் சபிண்டீகரண (வீட்டுக்கிரியை) அழைப்பும்



கடந்த 12.11.2007 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் பாசமிகு தந்தை

**அமரர் பொன்னம்பலம் செல்வரத்தினம்**

*(இளைப்பாறிய ஆசிரியர்)*

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.12.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராச வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (68878)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## ஆசிரிய நூலகர்கள் கவனத்துக்கு...

யாழ்ப்பாணம்,டிசெ.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆசிரிய நூலகர்களாகக் கடமையாற்றுவோரை நாளை வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகைதருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

(202-207)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.12

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் அடுத்த வருடம் தரம் 4 வகுப்புக்களில் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டச் செயலமர்வு நாளையும் நாளைமறுதினமும் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(202-207)


**முன்பள்ளி ஆசிரியை தேவை**

எமது கழகப் பாலர் பாடசாலைகளுக்கு ஆசிரியைகள் தேவை.
டிசெம்பர் 25இற்கு முன் நேரில் வரவும்.
செயலாளர் (68889)
பாலர் கல்விக் கழகம், *49/5 யாழ்.வீதி.*



**முருகானந்தா வைத்திய நிலையம்**

* நீண்டகால இருமல், தும்மல், ஆஸ்த்துமா, பீனிசம், தலைவலி என்பவற்றிற்கு சிறந்த சித்த மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும்.
* உடற்பலவீனம், வீரியமின்மை, நித்திரையின்மை என்பவற்றை நீக்கி தேக பலம் தரும் லேகிய வகைகளும் பெற்றுக் கொள்ளலாம்.

**பார்வையிடும் நேரம்:**
காலை 9மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை.
**இல.449, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.**
பிற்பகல் 3.30 முதல் 6மணி வரை.
**இல. 34 , சென். அன்ரனீஸ் வீதி, பாசையூர்.** (68887)



*கரித்தாஸ் - கியூடெக்*

**கேள்வி அறிவித்தல்**

*இயக்குநர் நெவாட் கியுடெக் கரித்தாஸ் அவர்களால் 647, கடற்கரை வீதி, குருநகரில் யாழ்.மீன்பிடி வலை உருவாக்கத் தொழிலக புதிய கட்டடம் நிர்மாணித்தல் சம்பந்தமாக யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ICTAD, NCCASC அங்கத்துவம் உள்ள M-7 இற்கு மேற்படாத பொருத்தமான உள்ளூர் கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட கூறுவிலை கோரல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.*

*13.12.2007 - 19.12.2007 வரை விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மேலதிக விவரங்கள் யாவும் கியுடெக் - கரித்தாஸ் காரியாலத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.*

**இயக்குநர்,**
**நெவாட் கியுடெக்-கரித்தாஸ்**, 14, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (68879)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினரின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு நேற்றுமுன்தினம் பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் ஆணைக்குழுவின் யாழ்.இணைப்பாளர் எஸ்.சிவராஜசிங்கம், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், கரித்தாஸ் - கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் அருட்தந்தை ஜெயக்குமார் ஆகியோர் உரைநிகழ்த்துவதையும் - நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி மனித உரிமைகள் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு விருது வழங்கிக் கௌரவிப்பதையும் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் : நேசன்)

# மரணவீடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது கொண்டாட்டம் நடத்துவது என்பது வேடிக்கையானது

## கவலை தெரிவிக்கிறார் அருட்தந்தை ஜெயக்குமார்

யாழ்ப்பாணம்,டிசெ.12

மரண வீடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் கொண்டாட்டங்கள் என்பது தேவையற்றதும் வேடிக்கையானதும் ஆகும். ஆனால் இவை கொண்டாட்டங்களாக அன்றி நினைவுகூரும் நிகழ்வுகளாகவும் நிகழ்வுகளை திரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சியாகவுமே நடத்தவேண்டும்.

மேற்கண்டவாறு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனங்களின் பணிப்பாளர் அருட் தந்தை ஜெயக்குமார் அடிகளார் குறிப்பிட்டார்.

சர்வதேச மனித உரிமைகள் தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் யாழ். பாதுகாவலன் மண்டபத்தில் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பாளர் எஸ்.சிவராஜசிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அருட்தந்தை கூறியதாவது-

மனித உரிமைகள் ஆணைக்குழுவும் கூட தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலையிலும் நெருக்கடியான சூழ்நிலையிலும் காணப்படுகின்றது.

கடமையைச் செய்யும்போது யாருடைய உதவியும் வேண்டியதில்லை. ஆண்டவன் கடமையை மேற்கொள்ளும்போது உதவிக்கு பலரைத் துணையாக அனுப்பி வைப்பார்.

இன்று நாட்டுச் சூழ்நிலையில் மனித உரிமைகள் பல இடங்களிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அதிகம் மீறப்படுகின்றன. இந்நிலைமையை நினைத்து அனைவரும் கவலைப்படவேண்டியதாக உள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் விடயம் நல்ல நிலையில் காணப்படவில்லையென சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பும் கூட கூறுகின்றன.

மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாட்டை ஆதரிப்பவர்களும் உண்டு எதிர்ப்பவர்களும் உண்டு. எதிர்ப்பவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு கூட பாதிப்பை ஏற்படுத்த முடியும். இதற்காக நாம் எமது செயற்பாடுகளைக் கைவிடமுடியாது - என்றார்.

(202-68)

# பொதுமக்கள் கூடும் இடங்களில் டெங்கு விழிப்புணர்வுப் பதாகைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ்ப்பாணத்தில் மக்கள் அதிகமாகக் கூடுமிடங்களில் டெங்கு நோய் பற்றிய விளம்பரப் பதாகைகளை நாட்ட யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகவலை யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ். பேருந்து நிலையம், அரியாலை மகப்பேற்று நிலையம், கல்வியங்காடு சந்தை, நாவாந்துறை சந்தை, குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தை பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயம் ஆகிய இடங்களில் டெங்கு பற்றிய விளம்பரப் பதாகைகளை அமைப்பதற்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் தமக்கு அனுமதி வழங்கியுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (202-51-95)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.12


தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் வழங்கப்படும் கொடுப்பனவு இன்று பிற்பகல் ஒரு மணியளவில் வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதுஎன்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (203-207)

# மீள் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.12

உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் எச்.என்.டி. கற்கைநெறி 4ஆம் வருட மாணவர்களுக்கான நிதீ முகாமைத்துவம் மீள்பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு இவ்வருடம் ஜூலை தோற்றியோர் மட்டும் அனுமதிக்கப்படுவர். விசேட அனுமதி அட்டைகளை எதிர்வரும் 18ஆம் திகதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.




# சாவகச்சேரி மருத்துவமனை தொலைபேசியுடன் தொடர்பை ஏற்படுத்த முடியாது மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

சாவகச்சேரி மருத்துவமனைத் தொலைபேசியுடன் இரவு வேளைகளில் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அவசர நோயாளர்களை இரவுவேளைகளில் ஏற்றிச்செல்வதற்கென அம்புலன்ஸ் உதவி பெறுவதற்கு மருத்துவமனை தொலைபேசியுடன் தொடர்பினை ஏற்படுத்துமாறு அதன் இலக்கம் (021222 8479) ஏற்கனவே சுகாதாரத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அண்மைக்காலமாக அந்த இலக்கத்துடன் இரவு வேளைகளில் தொடர்பைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதெனவும் இதனால் அவசர நோயாளர்களை இரவு வேளைகளில் மருத்துவமனைக்கு பெரும் சிரமங்களின் மத்தியில் கொண்டு செல்வதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை -

மருத்துவமனை நிர்வாகத்துடன் இவ்விடயம் தொடர்பாக தொடர்பு கொண்டு கேட்டபோது, மருத்துவமனைக்கு புதிய தொலைபேசி வழங்கப்பட்டு முன்னைய தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் புதிய இலக்கத்தை சுகாதாரத் திணைக்களத்தினர் ஊடகங்கள் மூலம் மக்களுக்கு தெரியப்படுத்துவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(202-207)

# யாழ்.மாவட்டத்தில் கல்விச் சேவையிலுள்ளோர் ஆசிரிய சேவையில் இணைக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ். மாவட்ட வலயக் கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் நியமிக்கப்பட்ட நிதி உதவியாளர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோர் ஆசிரிய சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

ஆசிரிய சேவையில் இணைந்து கொள்ள விரும்பும் மேற்படி உத்தியோகத்தர்களிடமிருந்து மாகாணக் கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு அரச சேவையில் நிலவிய பதவிகளுக்கு வேலையற்ற பட்டதாரி பயிற்சித் திட்டத்தில் கல்வித் திணைக்களத்திற்கு நியமனம் பெற்றவர்களுக்கே ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

அதிகஷ்டம், கஷ்டம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளதாகவும் விண்ணப்பப்படிவங்களை அந்தந்த வலயக் கல்வி அலவலகத்தில் பெற்றுக்கொள்ளலாமெனவும் அறிவித்துள்ளார். (202)

# தென்மராட்சியில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.12

தென்மராட்சி கல்வி வலயக் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு (தரம் 3,4,5) மாணவர்களிடையே நடத்தப்பட்ட தமிழ் அறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி கலைமன்ற மண்டபத்தில் நடைபெறும்.

போட்டிகளில் வெற்றிபெற்ற 176 மாணவர்களுக்கு பரிசில்களும் 619 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (1-207)

# மண்டைதீவிலுள்ள சைவ, கிறிஸ்தவ ஆலயங்கள் பூட்டப்பட்டுள்ளன; பூசைகள் இடம்பெறுவதில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.12

மண்டைதீவுப் பிரதேசத்திலுள்ள ஆலயங்களில் பூசை, வழிபாடுகள் இடம்பெறுவதில்லை எனப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சைவ ஆலயங்களும் புனித சம்பேதுருவானவர் தேவாலயமும் மூடப்பட்டு எந்தவித வழிபாடுகளுமின்றி சூனியப் பிரதேசம் போல் இருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

இடம்பெயர்வின் பின் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் இரண்டு சைவ ஆலயங்களில் மட்டும் நித்திய, நைமித்திய பூசைகளும் திருவிழாக்களும் நடைபெற்று வந்தன. திருவெண்காட்டு சித்திவிநாயகர் ஆலயமும் தெற்கு முருகன் கோவிலுமே புனராவர்த்தனம் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கோவில்களில் பூசை வைக்க அந்தணர்கள், பூசகர்கள் இல்லாத காரணத்தால் ஆலய தரிசனம் செய்ய இயலாதுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் ஆலயங்களுக்கு தேவையான [illegible] தற்குப் பின்னடிக்கின்றனர். நிரந்தர வதிவிட உரிமத்தைப் பெற்றவர்கள் மட்டுமே தங்கியிருக்கமுடியுமாதலால் ஆலயங்கள் பூசைகளின்றி வெறிச்சோடிப் போயுள்ளன.

வேப்பந்திடல் முத்துமாரி அம்மன்,

## கோயில்கள் சூனியப் பிரதேசமாக மாறிவருவதாக மக்கள் கவலை

கண்டுப்புளியடி வீரபத்திரர், கொவ்வைக் குளி சிவன்கோயில் ஆகியவை இதுவரை புனரமைக்கப்படவில்லை. கிழக்குக் கடற்கரையில் உள்ள கண்ணகை அம்மன் கோயில் மற்றும் சிறுப்புலம் கந்தசாமி கோயில் என்பன சூழ உள்ள பகுதிகளில் மக்கள் மீளக்குடியமராததால் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 11ஆம் திகதியில் இருந்து தீவுப்பகுதியின் மண்டைதீவு, அல்லைப்பிட்டி கிராமங்களில் ஏற்பட்ட அசாதாரண நிலையால் இப்பகுதியில் இருக்கும் கத்தோலிக்க தேவாலயங்களில் [illegible] வழிபாடும் ஆராதனையும் தடைப்பட்டுள் போயுள்ளன.

அல்லைப்பிட்டி மக்கள் முற்றாக வெளியேறிவிட்டதால் புனித ய்வானியார் ஆலயம், செய்வேத்தியார் கோயில் என்பவற்றில் பிராத்தனைகள் முற்றாக நின்றுபோயுள்ளன.

மண்டைதீவு சம்பேருதுவானவர் ஆலயமும் வழிபாடு நடத்த இயலாத நிலையில் உள்ளது. அதி உயர் பாதுகாப்புக்குரிய பகுதியில் அமைந்துள்ள இந்த ஆலயத்தில் அண்மையில் விசேடமாக வரவழைக்கப்பட்ட பங்குக் குருவின் தலைமையில் நன்றித்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. எனினும் பொதுமக்கள் பூசையில் கலந்துகொள்ளவில்லை.

பூசைவழிபாடுகள் நடைபெற்றுவந்த கோயில்களில் மட்டுமாவது வழிபாடுகள் தொடர்ந்து நடைபெற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (202-88)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 06 ★ 03 ★ 1924



உதிர்வு 23 ★ 11 ★ 2006

### அமரர் செல்லத்துரை அருளம்பலம்(அருள்)

**திதி: பூர்வபக்க திருதியை**

தாயின் பாசத்துடனும் தந்தையின் அறிவுரையுடனும்
எம்மை வளர்த்த அருமை ''அப்பா''!
அன்புடனும் பண்புடனும் எம்மை வழிநடத்திய ''மாமா''!
அல்லும் பகலும் எம்மை அரவணைத்து எமக்கு
உறுதுணையாயிருந்த ''அப்பப்பா''!
நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களுடன்.

*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*
**குடும்பத்தினர்.**

குகன்-அகம்,
தாவடி, கொக்குவில். (68875)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**திருமதி ஸ்ரீமாட்டி**
### சின்னராசா சிவகாமலட்சுமி அம்மா
*(பாக்கியம்)*

**மண்மகிழ்:**
**26-09-1924**
**விண்நெகிழ்:**
**13-11-2007**

*காலன் கவர்ந்த கதை கண்ணீரை வரவழைக்க*
*கலங்குகின்றோம் நாமிங்கு கடுதியிலே சென்றாயோ?*
*காற்றாகி வந்தசெய்தி கனவாகிப் போகுமுன்னே*
*கதியற்றெமை தவிக்கவிட்டு காததூரம் சென்றாயோ?*
*நிழலென்று நாம் நினைக்க நீறாகி வெந்தாயோ?*
*நித்தமும் தேடுகின்றோம் நித்திலத்தில் நாம்*
*வேற்றாகி வெந்ததினால் விம்முகின்றோம் நாமிங்கு*
*வேறுத்து வாராயோ? வேதனையைக் களைவதற்கு....!*

13.11.2007 அன்று எமை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எமதன்னையின் மரணச்செய்தி கேட்டு வந்து ஆறுதல் வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை (13.12.2007) வியாழக்கிழமை காலை 5 மணியளவில் எமதில்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி மற்றும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓம்சாந்தி!

தகவல்: சி.சிவபாலசிங்கம் (கிராம அலுவலர்) **பிள்ளைகள்.**
ஆலடி ஒழுங்கை, பொலிகண்டி,
வல்வெட்டித்துறை. (68851)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

*பிறப்பு 21 - 05 - 1968*



*இறப்பு 12 - 11 - 2007*

### பிரான்சிஸ் பிலிப் *(சின்னத்தம்பி சூரி)*

**கார்த்திகையில் காத்திருந்தோம்**
**உம்மை எதிர்பார்த்து நாம்**
**காலை வேளையில் வந்தசெய்தி எம்மை**
**காலமெல்லாம் கண்ணீர் சிந்த வைத்து**
**கலங்க வைத்து எம்மை**
**பிரிந்து சென்றாய் ஐயா!**
**எங்கள் வாழ்வில் கார்த்திகை விளக்காய்**
**வீற்றிருக்கிறீர்கள்**

*உங்கள் ஆன்ம இளைப்பாற்றிக்காக தினம்*
*பிரார்த்திக்கின்றோம் கண்ணீருடன் ஐயா!*

இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (12.12.2007) புதன்கிழமை காலை 6மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றிய பின்னர் குருநகர் தொடர்மாடியில் உள்ள எமது வீட்டிற்கு வருகை தருமாறு அழைக்கின்றோம்

தொடர்மாடி, குருநகர். (சி/54682) குடும்பத்தினா.

## பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

குருநகல்,டிசெ.12

யாழ்.கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் பெண்களுக்கான கடலக தொழில் நுட்பவியல் பயிற்சி நெறி நடைபெற உள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டு பயிற்சியைப் பெற விரும்பும் 18 தொடக்கம் 35 வயதிற்குட்பட்ட பெண்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கலாம் என்று கல்லூரியின் உதவிப் பணிப்பாளர் எம். செபஸ்ரியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

(202-51)

* * *

நவாலி,டிசெ.12

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் வீட்டு மின் இணைப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சிக்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ சாதாரண தரம் கற்றதுடன் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இப்பயிற்சி 6 மாதகாலத்திற்கு நடைபெறும். இப்பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெற விரும்புவோர் எதிர்வரும் 15ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, கிராமிய தொழிற்பயிற்சி நிலையம், பிரதேச செயலகம் முன்பாக சண்டிலிப்பாய் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் அறிவித்துள்ளார்.

(202-100)

## ஆனைக்கோட்டையில் எழுத்தறிவூட்டல் கூடம்

நவாலி,டிசெ.12

ஆனைக்கோட்டை (ஜே.133) கிராம மட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவினர் எழுத்தறிவூட்டல் கல்விக்கூடமொன்றை கடந்த வாரம் சிறுவர் பாதுகாப்பு அலுவலகத்தில் திறந்து வைத்துள்ளனர்.

இதில் ஒன்று தொடக்கம் 10 வயது வரையான எழுத, வாசிக்கத் தெரியாத பிள்ளைகளுக்கு மாலை வேளையில் கற்பித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (202-100)

## தென்மராட்சியில் சங்கக்கிளைகளில் திருட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.12

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரு கிளைக் கடைகள் கடந்த வாரம் திருடர்களின் கைவரிசைக்கு இலக்கானது.

கைதடி, கோவிலாக்கண்டி ஆகிய இரு கிளைக் கடைகளிலுமே திருட்டு இடம்பெற்றுள்ளது.

திருட்டுக்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202-207)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம்
*(பேபி அக்கா)*

தச்சனோடை, புலோலி தெற்கை பிறப்பிடமாகவும் வளலாய் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் நேற்று (11.12.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய சுங்க உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் சிவபாக்கியம் (கொழும்பு), கணேசமூர்த்தி (யாழ்.மாவட்ட செயலகம்), சுந்தரமூர்த்தி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் கல்யாணி (ஆசிரியர், வட இந்து மகளிர் கல்லூரி), சிவனேசன் (கொழும்பு), சந்துலா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் யசோ, சுதர்சன், கோபிகிருஷ்ணன், முகுந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோரியடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மகன், மருமகள்.**
*வளலாய் ஒழுங்கை,*
*தும்பளை, பருத்தித்துறை.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 26 - 01 - 1940



மறைவு 14 - 11 - 2007

### திருமதி இராஜேஸ்வரி சந்திரசேனன்

கடந்த 14.11.2007 புதன்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.12.2007) புதன்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெறும். அன்னாரின் இல்லத்தில் நாளை மறுதினம் (14.12.2007) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு இல்லம் நாடி வந்து இறுதிக் கிரியைகளின் போது உதவி செய்தவர்களுக்கும் ஆறுதலும் தேறுதலும் அளித்த அன்புள்ளம் கொண்டவர்களுக்கும் யாழ்.போதனா வைத்தியசாலையில் 4ஆம் வார்ட்டில் உதவிய வைத்தியர்கள், தாதிகள், பராமரிப்பாளர் மற்றும் தந்தி, தபால், தொலைபேசி மூலமாக எமக்கு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*தகவல்:*
**சந்திரசேனன்** *(கணவர்),*
**குடும்பத்தினர்.**

*46, நாயன்மார் வீதி,*
*நல்லூர்.* தொ.பே 021 222 5752 (68833)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான விலை மனுக்கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு உரித்தான ஒரு சில இடங்களுக்கு ஒரு வருடத்திற்கு பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான அரக்கிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

பொதுசன பாதுகாப்பு, சட்டம் ஒழுங்குகள் அமைச்சில் பதிவு செய்துள்ள குறைந்தது மூன்று வருட அனுபவமுள்ள பாதுகாப்பு சேவை வழங்குநர்கள் மனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவம் மற்றும் தொடர்புடைய விலை மனு ஆவணங்களை 26.12.2007 மதியம் 12 மணி வரை உதவிப் பதிவாளர் நிரிவாகக் கிளை அலுவலகத்தில் அலுவலக நாள்களில், மீளளிக்கப்படாத கட்டணமாக 500 ரூபாவை நிதிக் கிளையில் செலுத்திய பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் உறையின் மேல் மூலையில் ''பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான விலை மனு'' என அடையாளமிடப்பட்டு 26.12.2007 பி.ப. 2மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ. இல. 57, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் உள்ள விலை மனுப் பெட்டியில் இடப்படலாம்.

விலை மனுக்கள் 26.12.2007 அன்று பி.ப. 2.30 மணிக்குப் பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்திற்கு சமுகமளிக்கலாம்.

சம்பளச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திற்குக் குறையாத சம்பளம் பாதுகாப்பு ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்ற உத்தரவாதம் வழங்குநரால் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக கொள்வனவுச் சபை முடிவே இறுதியானது.

(சி/54679) **பதிவாளர்.**

## யாழ்ப்பாணம் மாநகர சபை
### வீதி வேலைக்கான
## கேள்வி அறிவித்தல் - 2007

கீழ்க் குறிப்பிட்ட வீதி வேலைகளுக்கு யாழ்ப்பாணம் மாநகரசபையில் பதிவு செய்துள்ள வலுவுள்ள (ICTAD) நிர்மாண பயிற்சி நிறுவனத்தின் பதிவுள்ள, வற் வரி செலுத்தும் மிகத் தகைமை உடைய ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் 13.12.2007 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.
2. கேள்விப் பத்திரங்கள் 14.12.2007 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
3. கேள்விகள் யாவும் 14.12.2007 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கடித உறையில் இட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வீதியின் பெயருடன் வீதி வேலைக்கான கேள்வி என எழுதி மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியிலோ நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. இவ்வீதி செப்பனிடலுக்குத் தேவையான தார் சபையினால் வழங்கப்படும்.
6. மேலதிக விவரங்களை யாழ்.மாநகரசபையின் நல்லூர் இந்து விடுதியில் அமைந்துள்ள வீதி வேலைப்பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்க முடியாத கேள்வி வைப்புப் பணம் (வற்வரி நீங்கலாக) | வற் |
|---|---|---|---|---|---|
| 01 | தர்மலிங்கம் ஒழுங்கை, கோட்டடி. | M 9 | 4,000.00 | 1,000.00 | 150.00 |

*குறிப்பு:* வேலைகள் யாவற்றையும் 24.12.2007 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுறுத்தி ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**மு.செ.சரவணபவ**
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்*

(சி/54684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பிரதம நீதியரசர் உரைத்த நீதி தலைவர்களின் காதுகளில் விழுமா?

யுத்த முனைப்பிலும் போர்த் தீவிரத்திலும் அவா கொண்டு'அலையும் இலங்கை அரசுக்கு நல்ல சூடு கொடுக்கும் விதத்தில் முக்கிய கருத்து ஒன்றை முன்வைத்திருக்கின்றார் இலங்கையின் பிரதம நீதியரசர் சரத் நந்தன சில்வா.

அதுவும் ஐ.நா. அமைப்புகளின் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் என உயர்மட்டத்தினர் பிரசன்னமாகியிருந்த சபையில் -

சர்வதேச மனித உரிமைகள் தினம் தொடர்பான நிகழ்வில், இலங்கையின் மனித உரிமைகள், இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்கவையும்வைத்துக் கொண்டு -

கூடியிருந்த எல்லோரினதும் பலத்த ஆரவார கைதட்டல்களுக்கு மத்தியில் -

இந்த யதார்த்தத்தை - உண்மையை - அப்பட்டமாக எடுத்துரைத்திருக்கின்றார் இலங்கையின் பிரதம நீதியரசர்.

*''யுத்தத்தின் மூலம் சமாதானத்தை வென்றெடுக்கவே முடியாது. அப்படி வென்றெடுக்கலாம் என்று யாராவது கூறுவார்களேயானால், நடக்கமுடியாத ஒன்றைப் பற்றி அவர் பேசுகின்றார் என்றே அர்த்தம்''* - என்று பிரதம நீதியரசர் அப்பட்டமாக, வெளிப்படையாக எடுத்துரைத்திருக்கின்றார். யுத்தத்தினால் அமைதியை நிலைநாட்டவே முடியாது. அடிப்படை மனித உரிமைகளை நேர்சீராக நடைமுறைப்படுத்துவதன் மூலமே சமாதானத்தை - நிரந்தர அமைதியை - எட்ட முடியும் என்றும் அவர் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

''மனிதர்களிடமும் மிருக இயல்பூக்கம் - குணாம்சம் - உண்டு. மற்றவர்களை மிஞ்சி மேம்பட்டு நிற்கவேண்டும் என்ற அந்த மிருக சுபாவம் விஞ்சுவது வழமையான மனிதப்போக்குத்தான். அத்தகைய குணாம்சம் விஞ்சி நிற்கும் வரை மனித உரிமை மீறல்களும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அத்தகைய போக்குகள் வெளிப்படும் சமயங்களில் நாம் மிக அவதானமாக இருக்க வேண்டும். அத்தகைய குணாம்சங்களை அடக்கி, மனித உரிமைகளைப் பேணுவதில் நாம் முனைப்புக் காட்டவேண்டும். ஆனால் அது நமது நாட்டில் நடக்கவில்லை. அதனால்தான் நமது தேசத்தில் போர் தொடர்கின்றது.

*''சமாதானத்தை எட்டும் தனது முயற்சியில் போர் மூலம் அதை அரசு அடையவேமுடியாது. மனித உரிமைகளை சரிவரப் பேணி நடைமுறைப் படுத்துவதன் மூலமே அதை ஈட்ட - எட்ட- முடியும். போரினால் அல்ல.''*

- இவ்வாறு இலங்கைஅரசுக்கு அழுத்தம் திருத்தமாக ஆலோசனை சொல்லியிருக்கின்றார் அந்த அரசின் நீதித்துறையின் உயர் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்ற பிரதம நீதியரசர். இலங்கை இனப்பிரச்சினை இன்று மிக மோசமான உள்நாட்டுப் போராக வெடித்திருக்கின்றது. இதற்கான காரணத்தை - பின்புலத்தை - சுருங்கக் கூறி விளங்கவைக்க முயன்றிருக்கின்றார் பிரதம நீதியரசர் என்பதே உண்மை.

இலங்கைத் தீவில் தனித்துவமான தேசிய இனத்தவர்களாக தமிழர்களின் அடிப்படை உரிமைகள் மதிக்கப்படாமல், அவர்களை அடக்கி ஒடுக்கும் தீவிரத்துடன் பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்குப் பேரினவாதம் சிறுபான்மையினரை விஞ்சியதாகத் தன்னைக் கணித்து, மேம்பட்டு நிற்க வெறிகொண்டலைந்தமையால்தான் - சிறுபான்மைத் தமிழர்களின் நியாயபூர்வமான அடிப்படை உரிமைகள், நீதியான அபிலாஷைகள் மிதிக்கப்பட்டமையால்தான் - இந்த நாட்டில் இனப்பிரச்சினை, வன்முறைப் போர் வடிவத்துக்குத் திரும்பியது. கொடூர யுத்தம் வெடிக்கும் இன்றைய பேராபத்து நிலை தோன்றியது.

ஆனால் இன்றும் கூட தென்னிலங்கைச் சிங்களத் தலைமையிடம், சிறுபான்மையினருக்கு நீதி செய்யும் நியாயப் போக்கு உருவாகவேயில்லை என்பதுதான் உண்மை. தமிழர்களை ஆயுத முனையில் அடக்கி, அவர்களது உரிமைக் குரலின் வலிமையைச் சிதறடித்து, பேரினவா தத்தின் காலில் விழும் அடிமை இனமாகத் தமிழினத்தை அடக்கி ஒடுக்கவே மஹிந்த ராஜபக்ஷ அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது. அதற்காகவே யுத்த வெறிகொண்டு அலைகின்றது கொழும்பு அரசு.

ஆனால், அந்தத் தீவிரமும், வெறியும் அமைதியை ஏற்படுத்தவேமாட்டா என்ற யதார்த்தத்தை கௌதம புத்தரை வணங்கும் கொழும்புக்கு, பௌத்த சீலம் போலப் போதித்திருக்கின்றார் பிரதம நீதியரசர்.

ஆனால், கொழும்பின் காதில் இந்தப் போதனை - அதில் நுட்பமாகப் புதைந்திருக்கும் நீதி, நியாயம் - எல்லாம் விழுமா என்பதே கேள்வி.

'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு' என்பார்கள். பிரதம நீதியரசர் சூடாகக் கொடுத்த இந்த அறிவுரை இந்த நிர்வாகத்துக்கு உறைத்ததோ தெரியவில்லை.

எது எப்படியென்றாலும் 'முதலையும், மூர்க்கனும் கொண்டது விடா' என்பார்கள். போர்வெறித் தீவிரத்தில் மூர்க்கமாக இருக்கும் அரச பாதுகாப்புத்துறை இயந்திரத்துக்கு, தனது யுத்தப் பிடிவாதத்தில் இருந்து இறங்கி, நியாயமாகச் சிந்தித்து, நீதியாக நடந்து கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படுமா என்பது சந்தேகத்துக்கும் கேள்விக்கும் உரியதே.

இலங்கை அரசுத் தலைவர்களும் பாதுகாப்பு முக்கியஸ்தர்களும் அடுத்தடுத்து வெளியிட்டுவரும் யுத்த அறைகூவல் அழைப்புகளைப் பார்க்கும்போது பிரதம நீதியரசரின் அறிவுரை அவர்களது செவிப்பறையை எட்டுவது சந்தேகம் என்றே தோன்றுகின்றது.

# கத்தியைத் தீட்டாதே, தம்பி புத்தியைத் தீட்டு!

# நாடாளுமன்றில் மாவை அரசுக்குப் புத்திமதி!!



பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை இந்த அரசாங்கம் பொலீஸாரையும்இராணுவத்தினரையும் கொண்டே தீர்க்க முயல்கிறது. அந்த வழியில் வெற்றி காண முடியாது.

அறிஞர் அண்ணா கூறியவற்றை உங்களுக்கு ஆலோசனையாகச் சொல்கிறேன் 'கத்தியைத் தீட்டாதே தம்பி! தம்பி புத்தியைத் தீட்டு!' என்பதே அதுவாகும்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார் யாழ்.மாவட்ட உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

அப்போது அவர் கூறியதாவது:

**மாவை ஆலோசனை**

பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் நடத்திய காட்டுமிராட்டித்தனமான தாக்குதல்களை தொலைக்காட்சி மூலம் காணமுடிந்தது.

தாக்கப்பட்டவர்களும் கைது செய்யப்பட்டவர்களும் மாணவர்கள். அவர்கள் சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களாக இருக்கலாம் அல்லது யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களாக இருக்கலாம். அது பிரச்சினையில்லை. அவர்கள் எதிர்காலப் பிரஜைகள். அவர்களைப் பாதுகாக்க வேண்டியதும், அவர்களின் பிரச்சினைகளைப் பேச்சு மூலம் தீர்க்க வேண்டியதும் அரசின் கடமை.

இந்தச் சந்தர்ப்பத்தில், மாணவர்கள் கைது செய்யப்படுவதையும், சிறையில் அடைக்கப்படுவதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அண்மைக்காலமாக நாட்டில் ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் நீதிமன்றத்தின் முன் சென்றே தீர்வு காணவேண்டியதாக இருக்கின்றது. இது ஒரு துரதிஷ்டநிலை.

**பொலீஸார், இராணுவத்தினரைக் கொண்டுதீர்க்க முயலும் அரசு**

பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை இந்த அரசு, பொலிஸாரையும் இராணுவத்தினரையும் கொண்டே தீர்க்க முனைகின்றது. அந்த வழியில் வெற்றி காணமுடியாது.

இவ்விடயத்தில் முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அன்று கூறியவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தனது சீடர்களைப் பார்த்து 'கத்தியைத் தீட்டாதே தம்பி! உன் புத்தியைத் தீட்டு! என்று கூறினார். அதாவது உன்னுடைய புத்திக்கூர்மையையும், விவேகத்தையும் சீர் செய்து பயன்படுத்து என்று உபதேசம் செய்தார்.

அதையே நான் இப்பொழுது இந்த அரசுக்குக் கூறவிரும்புகிறேன்.

அடிதடி மூலம் மாணவர்களை அடக்காமல், சுமுகமான முறையில் பேச்சின் மூலம் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும்- என மாவை சேனாதிராஜா கூறினார். (அ-சி)

## சாரணிய செயற்பாடு குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ்.கல்விவலயத்திற்கு உட் பட்ட பாடசாலைகளில் சிறுவர்சாரணியச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஆரம்பபிரிவு ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையில் இடம்பெறவுள்ளது. ஆரம்பபிரிவு ஆசிரியர்களை செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (1)

# 'சுதந்திர காவலர்' விருது மனோ கணேசன் எம்.பிக்கு!

## அமெரிக்கா வழங்கி கௌரவிப்பு



கொழும்பு, டிச. 12

அமெரிக்காவினால் சர்வதேச ரீதியில் வழங்கப்படும் 'சுதந்திர காவலர்' விருதின் இரண்டாவது இடம் மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் மக்கள் கண்காணிப்புக் குழுவின் அழைப் பாளருமான மனோ கணேசனுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இதனை சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று முன்தினம். வாஷிங்டனில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

மனித உரிமைகளைப் பேணும் நடவடிக்கையில் விசேடமான பணியாற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு அல்லது அமைப்புகளுக்கு இந்த விருதை இந்த வருடம் தொடக்கம் வழங்குவதற்கு கடந்த ஆண்டு சர்வதேச மனித உரிமைகள் தினத்தின்போது அமெரிக்கா உத்தியோகபூர்வமாகத் தீர்மானித்து அறிவித்திருந்தது.

இதன்படி முதல் விருது இவ்வருடம் ஸிம்பாப்வேயில் மனித உரிமைகளுக்குப் பணியாற்றும் சட்டத்தரணிகள் குழு என்ற தொண்டு நிறுவனத்துக்கு வழங்கப்படுகின்றது.

இரண்டாவது இடம் இலங்கையில் மக்கள் கண்காணிப்புக் குழுவை அமைத்து, இங்கு மனித உரிமைப் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்குக் குரல் எழுப்பி வரும் மனோ கணேசனுக்கு வழங்கப்படுகின்றது என அமெரிக்கா உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறது.

இலங்கையில் சட்டத்துக்கு முரணான கொலைகள், ஆள்கடத்தல்கள், கப்பம் கோரல்கள், சித்திரவதைகள், சட்டவிரோதக் கைதுகள் போன்றவற்றுக்காக 2006 இல் தாம் அமைத்த மக்கள் கண்காணிப்புக் குழு ஊடாக மனோகணேசன் குரல் கொடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# சப்ரகமுவ பல்கலை. மாணவரின் பிரச்சனைக்கு நேற்று சுமுகத் தீர்வு

கொழும்பு, டிசெ. 12

நாடாளுமன்றிலும், கொழும்பு லிப்டன் சதுக்கத்திலும் பெரும் சர்ச்சையையும் குழப்பத்தையும் ஏற்படுத்திய சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினை நேற்று மாலை சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்டது.

தமது பிரச்சினைகளை முன்னிறுத்தி இந்த மாணவர்கள் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டம் பெரும் களேபரத்தில் முடிந்தது தெரிந்ததே.

நேற்று மாலை உயர்கல்வி அமைச்சர் விஸ்வ வர்ணபால, பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா, சிரேஷ்ட அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, நிமல் சிறிபால டி சில்வா மற்றும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தலைமையிலான எம்.பிக்கள் குழுவினர், பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர்கள், சப்ரகமுவ பல்கலைக் கழக உபவேந்தர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள், மூத்த பொலிஸ் அதிகாரிகள், உயர்கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்த இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அந்தப் பேச்சிலேயே சுமுகத் தீர்வு எட்டப்பட்டது.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு முன் மறியல் செய்த சமயமும், லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் செய்த சமயமும் கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் இப் பேச்சின்போது உறுதி கூ றப்பட்டது. (அ-உ)

## தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், டிசெ.12

தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப்பரீட்சைகள் இம்மாதம் 26ம் திகதி ஆரம்பமாகின்றன. மாணவர்கள் தங்களது அனுமதி அட்டைகளை 20ம், 24ம் திகதிகளில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று கல்லூரி அதிபர் என்.யோகராஜன் அறிவித்துள்ளார்.

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 27 | வியாழக்கிழமை 13.12.2007 |
| திதி : சதுர்த்தி | பி.இ 03.15 |
| நட்சத்திரம் : | உத்தராடம் பி.ப 05.20 |
| சுபநேரம் | : 07.50 - 09.20 |
| ராகுகாலம் | : 01.50 - 03.20 |

சதுர்த்தி விரதம்

# புலிகளின் முகவர்கள் இருவர் சென்னையில் திங்களன்று கைது?

திருச்சி,டிச.12

கடற்புலிகளுக்குப் படகுகளைக் கொள்வனவு செய்து கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் புலிகளின் முகவர்கள் எனத் தெரிவிக்கப்படும் இருவரை 'கியூ' பிரிவுப் பொலிஸார் திங்களன்று கைதுசெய்துள்ளனர்.

இராமேஸ்வரம், நடராஜபுரத்தைச் சேர்ந்த பூமிநாதன் (வயது-28), அவருக்கு உதவியாளராக இருந்த தங்கச்சிமடம் ஆரியன் குன்றுப் பகுதியைச் சேர்ந்த புஷ்பதனராஜ் ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸாரை மேற்கோள் காட்டி தமிழக நாளேடுகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

பூமிநாதன் புலிகளிடம் இருந்து பணம் பெற்று அவர்களுக்குப் படகுகளைக் கொள்வனவு செய்து அனுப்பி வைப்பவர் என்றும் -

[illegible] பகுதிகளிலிருந்து படகுகளைக் கொள்வனவு செய்தால் பிறருக்கு சந்தேகம் எழும் என்ற காரணத்தால் புதுக்கோட்டை, தஞ்சை போன்ற கடலோரப் பகுதிகளிலுள்ள மீனவர்களிடமிருந்து படகுகளைக் கொள்வனவு செய்து புலிகளுக்கு வழங்கி வந்தார் என்றும் -

'கியூ' பிரிவுப் பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்திருப்பதாக நாளேடுகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

சென்னையில் 'கியூ' பிரிவுப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையில் யாழ்ப்பாணம், வல்வெட்டித் துறையைச் சேர்ந்த ஜெயக்குமார் (வயது-34), மன்னார், சின்னக் கடையைச் சேர்ந்த ஜேம்ஸ் (வயது -46) மற்றும் சென்னை சூளைமேடு ரவிக்குமார் (வயது-42) என மூவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்தனர் (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு உதவினால் கடுமையான நடவடிக்கை

## எச்சரிக்கிறார் தமிழக டி.ஜி.பி.



சென்னை, டிசெ.12

தடைசெய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு எவரேனும் உதவிபுரிந்தால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார் தமிழகப் பொலிஸ் டி.ஜி.பி.ராஜேந்திரன்.

தமிழகத்தில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதா என்பது குறித்துத் தமிழக நாளேடுகளுக்குக் கருத்துத் தெரிவித்த இராஜேந்திரன் -

தமிழகத்தில் ஏற்கனவே பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கடலோர மாவட்டங்களில் பொலிஸார் உஷாராக உள்ளனர். உளவுப் பிரிவுப் பொலிஸாரும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸார் விழிப்பு டன் பணியாற்றுவதால்தான் தவறு செய் கிறவர்கள் கைதாகின்றனர்.

கடலோரங்களில் உள்ள சோதனைச் சாவடிகளில் பொலிஸார் 24 மணிநேரமும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். சாவடிகளின் எண்ணிக்கையும் விரைவில் அதிகரிக்கபபடும்.

குறிப்பாக, தஞ்சை முதல் இராமநாதபுரம் மாவட்டம் வரை பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கடலில் கப்பல் படை மற்றும் கடலோரக் காவல் படையினரும் தீவிர கண்காணிப் பில் ஈடுபட்டுள்ளனர். - என்றார் அவர்.

### மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருமுனைகளில் இருந்து சரமாரியான ஆட்லறி மற்றும் பல்குழல் தாக்குதல்களை நடத்தியவாறு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியை நோக்கி பெரும் எடுப்பில் முன்னேற முயன்ற படையினரை தாம் தீவிர எதிர்த்தாக்குதல் நடத்தி முன்நகர்வை முறியடித்திருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இந்தக் கடும் சமரில் படைத்தரப்பில் 20 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் 75 பேர் படுகாயமடைந்திருக்கின்றனர் என்றும் -

பிற்பகல் 3.30 மணிக்கு படையினர் பின்வாங்கத் தொடங்கினர் என்றும் மாலை 6 மணிக்கு படையினர் பழைய நிலைகளுக்கு விரட்டியடிக்கப்பட்டனர். இதன்போது படையினரிடம் இருந்து பெருமளவான ஆயுதத்தளபாடங்களையும் கைப்பற்றியுள்ளனர் என்றும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இதேவேளை, இத்தாக்குதலில் 20 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டும் 30க்கு மேற்பட்டோர் காயமடைந்திருக்கின்றனர் என்றும் படைத்தரப்பில் 3 பேர் கொல்லப்பட்டும் 7 பேர் காயமடைந்திருக்கின்றனர் என்றும் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தகவல் வெளியிட்டிருக்கிறது.

உங்கள் அபிமான My Computer
கணிணி சஞ்சிகையின்
4 ஆவது இதழ் சகல இடங்களிலும்.
கூடிய பக்கங்கள்! நிறைந்த தகவல்கள்!
வெளியீடு Speed IT Net 021 4591871

### புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ரோஹித போகொல்லாகம நேற்று ஜப்பானில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார்.

முன்னைய பேச்சுகளின்போது, அவற்றை ஒட்டி எட்டப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாடுகளைப் புலிகள் மோசமாக மீறி வந்துள்ள நிலையில், இனிமேல் நடக்கும் உத்தேசப் பேச்சுகளை ஒட்டி யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கக் கோருவது அர்த்தமற்றது என்றார் அவர்.

### ஈழம் என்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.

அவரது நீண்ட உரையின் சில முக்கியபகுதிகள் வருமாறு:-

வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதங்கள் நிறைவடைந்த பின்னர் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் தீர்வுத்திட்டம் ஒன்றை அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைப்பார் என சர்வதேச சமூகம் எதிர்பார்க்கிறது.

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்காக பேச்சுக்களின் மூலமான தீர்வுக்கு விடுதலைப்புலிகளின் தலைமை நேர்மையாகச்செயற்படும் என்பதில் எமக்கு பலத்த சந்தேகம் உள்ளது.

தமிழ் மக்களுக்காக யாரும் பேசுவதை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்கள் வன்முறைகளைக் கைவிடும் வரை அவர்களாகவே எதிர்கால அமைதி முயற்சிகளில் இருந்து விலகியிருக்கப் போகின்றனர்.

மிதவாத தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் அரசியல் தீர்வு ஒன்றை அரசு சமர்ப்பிப்பதை ஊக்குவிப்பதில் தான் வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதத்தின் பின்னர் அனைத்துலக சமூகம் கவனம் செலுத்தும். - என்றார். (அ)

### தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் தவறாது சபைக்கு சமுகம் தருமாறும் தனது எம்.பிக்கள் அனைவரையும் அக்கட்சி பணித்திருக்கின்றது.

கட்சியின் கொறடா செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், சிவநேசன், அரியநேத்திரன், ஜெயானந்தமூர்த்தி ஆகியோரே தற்சமயம் வெளிநாட்டில் தங்கியிருக்கின்றனர்.

அவர்கள் அனைவரும் நாளை மறுதினத்துக்கு முன்னர் நாடு திரும்பி விடுவர் என கூட்டமைப்பின் மூத்த எம்.பி. ஒருவர் நம்பிக்கை வெளியிட்டார். (உ)

இவ்வாண்டிற்கான இறுதிப் பிரிவுகள் ஆரம்பம்
Diploma in
Computerized Accounting
சர்வதேச ரீதியில் முன்னனியிலுள்ள Accounting Software களினூடாக Network ஊடான கணக்குபதிவு முறைகளுடன்......
ACCPAC + Quick Books Premier + MYOB
Course Contents
❖ Manual Accounting
❖ Financial Accounting
❖ Cost Accounting
❖ Taxation (Including VAT)
❖ Stock Control
❖ Bank Reconciliation
❖ Budgeting
வகுப்புக்கள் ஆரம்பம்.
Batch I: 15/12/2007
Batch II: 16/12/2007
Batch III: 17/12/2007
Batch IV: 20/12/2007
Time : 02.00- 03.00
COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE: 021-222 8250 , 0777 222 422

TUTION - MATHS
ENGLISH&TAMIL MEDIUM
40 வருடகாலம் கணிதம் கற்பித்த அனுபவமுள்ள ஆசிரியரால் ENGLISH, தமிழ் மொழி மூலம் ஆண்டு 6 தொடக்கம் O/L 08 வகுப்புக்கள் தனியாகவும் குழுவாகவும் நடத்தப்படும்
தொடர்புகளுக்கு K.Pararajasekaran
8,Fletchers Lane, Chundikuli
T.P.No 9867

கல்வியாண்டு - 2008
தரம்: 4 முதல் O/L வரை
புதிய பிரிவு - 2. ஆரம்பம்
புதிய பாடத்திட்டம் உடன் அறிமுகம்
தரம் : 4. O/L ENGLISH MEDIUM → MATHS. SCIENCE. ENGLISH. வாராந்தம் மீட்டல் இவ்விரண்டு ஆசிரியர்கள். 16 பரீட்சைகள். மதிப்பீடுகள். கணிப்பீடுகள். கைவேடுகள் -100.
GR: 6.7.8 → MATHS. ENGLISH. SCIENCE இவ்விரண்டு ஆசிரியர்கள். 16 பரீட்சைகள். மதிப்பீடுகள். கணிப்பீடுகள்.
சயன்ஸ் அக்கடமி
நல்லூர் (இன்றும் அனுமதிகள் பெறமுடியும்) அரியாலை
தரம்:5.2008 புலமைப்பரிசில்பரீட்சைவெற்றித்தேர்வு

### நாடாளுமன்றத் திடீர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான வாய்ப்புகள் உண்டென மூத்த அரசியல் வாதிகள் வட்டத்தில் கருத்து நிலவுகிறது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் இடம்பெறும்போது அரசுத் தலைமைக்குப் பெரும் அதிர்ச்சி காத்திருக்கின்றது. எதிர்பாராத திருப்பங்கள் இடம்பெறும். காத்திரமான எண்ணிக்கை வாக்கு வித்தியாசத்தில் நாடாளுமன்றத்தில் இந்த வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படும்.

- இவ்வாறு எதிர்க்கட்சிகள் தரப்பின் மூத்த தலைவர்கள் சிலர் உறுதியாகவும், திடமாகவும் நேற்றுத் தகவல் வெளியிட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, வெளியில் பரபரப்பை ஏற்படுத்தாமல் பலதரப்பினருடனும்கலந்துபேசிவெள்ளிக்கிழமை நாடாளுமன்ற வாக்கெடுப்புத் தொடர்பாகவும், எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் வியூகங்களை வகுத்துள்ளார் என்றும் -

வெள்ளியன்று அது நாடாளுமன்றில் கட்டவிழத் தொடங்கும்போது அரசுத் தலைமைக்கு அதிர்ச்சி காத்திருக்கும் - என்றும் அத் தலைவர்கள் உறுதியாகத் தெரிவித்தனர்.

வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதில் திடமான உறுதி கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பாகத் தமக்குள்ள பலத்தில் அதிக நம்பிக்கை வைத்திருப்பதால், அரசுத் தரப்பிலிருந்து ஒரு கட்சி எதிரணிக்குத் தாவி, ஆதரவு தர முன்வந்த போதும், இதுவரை காலமும் அந்தக் கட்சி 'இரு தோணியில் கால் வைத்தமை போல' நடந்து கொண்ட காரணத்தை எரிச்சலுடன் சுட்டிக்காட்டி, இப்போது அக்கட்சியின் ஆதரவு தேவையில்லை என்று அதன் தலைவர்களுக்கு முகத்தில் அடித்தால்போல பதிலடி கொடுத்து அனுப்பி விட்டார் என்றும் தெரிகின்றது.

அரசுக் கூட்டமைப்புக்குள் முஸ்லிம்கள் தரப்பிலிருந்தும், மலையகத் தரப்பிலிருந்தும் மட்டுமல்லாமல், அரசின் பிரதான கட்சியிலிருந்தும் கூட ஓரிருவர் - அதுவும் முக்கியஸ்தர்கள் - எதிரணிப்பக்கம் தாவுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதேசமயம், இந்த வரவு - செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கான சாதகமான சமிக்ஞை ஜே.வி.பி. பக்கத்திலிருந்து மற்றைய எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

#### நாடாளுமன்றம் கலைக்கப்படலாம்

இலங்கையில் இதுவரை காலமும் இருந்த அரசுகளில் ஊழலிலும், மோசடியிலும் மிக மோசமான நிர்வாகம் மஹிந்த ராஜபக்ஷவின் இந்த அரசினுடையதே என்று சுட்டிக் காட்டியுள்ள ஜே.வி.பி., இந்த அரசைக் கவிழ்த்து, புதிய அரசு ஒன்றை ஸ்தாபிப்பதற்கான பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தயாராகும் படி மக்களுக்கு அழைப்பு விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தபால் ஊழியர்கள் சங்கத்தின் 10 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பிரதான உரை நிகழ்த்திய ஜே.வி.பியின் தொழிற்சங்கப் பிரிவுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லால் காந்த இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

மஹிந்த அரசு தன்னுடைய திறமையின்மை, ஊழல், மோசடிகள், நிர்வாகச் சீர்கேடு, அடக்குமுறைப் போக்கு ஆகியவற்றை மூடி மறைக்க யுத்தத்தைப் பயன்படுத்துகின்றது என்றும் அவர் அங்கு குற்றம் சுமத்தியமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளையே நாடு திரும்புகின்றார்.

அடுத்தநாள் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் அரசு வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்குறித்து ஆராய்ந்த பின்னர் சில சமயம் வியாழனன்று இரவு - வாக்கெடுப்புக்கு முதல் நாள் - நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பொதுத் தேர்தலுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று எதிரணி வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன.(அ-உ)

### யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இங்கு வந்துசேரும் ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி முற்பகல் 11 மணிக்கு விசேட உரை நிகழ்த்துவார்.

சர்வமதத் தலைவர்களின் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக வெளிநாடுகளிலிருந்தும், தென்னிலங்கையிலிருந்தும் 36 பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கம்போடியாவைச் சேர்ந்த வண. டெப் வொங், மகாத்மாகாந்தியின் பேர்த்தியும் தென்னாபிரிக்க நாடாளுமன்றப் பிரதிநிதியுமான செல்விலாகாந்தி, பாகிஸ்தானைச் சேர்ந்த மிர் நவாங்கான் மார்வட், ஜப்பானைச் சேர்ந்த வண. கலாநிதி மிக்கியோ டி ஷினோஷக்கி, நியூயோர்க்கை சேர்ந்த கலாநிதி வில்லியம் எல்வென் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்த சேர்ந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளாவர்.

தென்னிலங்கையில் இருந்து அமரபுர நிக்காயாவின் உதவிமகாசங்கநாயக்கர் வண கொட்டுக்கொட தம்மவாச தேரர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பத்தே கம சமிததேரர் ஆகியோரும் நேற்று யாழ்ப் பாணம் வந்து சேர்ந்தனர்.

இந்த மாநாட்டில் நல்லை குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் உட்பட முக்கிய இந்துமதத் தலைவர்களும் கலந்து கொள்கின்றனர்.

யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கலந்து கொள்ளும் குழுவில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர் வியான்சி பெர்னாண்டோ ஆண்டகை, குருநாகல் ஆயர் குமார் இலவங்சிங்க, மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆகியோரும் இடம் பெறுகின் றனர்.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத் துணைவேந்தர் பென்னஸ்வில்ல விமலரத்ன தேரர் மாநாட்டில் கலந்து கொள்ள இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேர்வார்.

இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் சர்வமதத் தலைவர்கள் மாநாடுபிப.5மணிக்கு நிறைவுறும் நாளை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நிகழ்வுகள் மு.ப.11 மணியுடன்முடிவு றும்.

### லண்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் ஒன்றுதிரண்ட மக்கள் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பல்வேறு சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

போராட்டத்தின் இறுதியில் ஜெனி வாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்துக்கு இலங்கை அரசு, தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாட்டு மனு ஒன்றையும் கையளித்தனர். (சி)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் மறைவிடம் என்று கருதப்படும் ஓரிடத்தில் இருந்து பாவிக்கப்பட்ட மருந்துப் பொருள்களை மீட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட பகுதிக்கு மேலதிக படையினர் அனுப்பப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

2008 தரம் 11 இற்கான விஞ்ஞானம்
அலகுரீதியான....
❋ குறிப்புகள் ❋ பகுதி ஐ.ஐஐ வினாக்கள் ❋ விஞ்ஞான விளக்கங்களுடன்
அலகு 01 வெளிவந்து விட்டது.
அலகு 02 மிகவிரைவில்
ஆசிரியர்: ப.பிரியந்தன் T.P: 0779994021
சகல புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்

கொக்குவில்
எடிசன் அக்கடமி
(கொக்குவில் பொதுச் சந்தைக்கு எதிர் வீதியில் 100 M உள்ளே)
தரம் 6 முதல் O/L வரை
ஆரம்பம்:
15.12.2007 சனிக்கிழமை 10.45a.m
(அனுமதிகளை உறுதிப்படுத்தவும்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org